Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 16 சனிக்கிழமை (02.11.2013) பக்கங்கள் 20 ஓசை – 033



## சர்வதேச ஒத்துழைப்பு இலங்கைக்கு அவசியம்

### ஆஸி. அமைச்சர் கோரிக்கை

(கொழும்பு)

உலக நாடுகள் இலங்கையுடன் இணைந்து செயற்பட வேண்டுமென அவுஸ்ரேலிய அரசாங்கம் கோரியுள்ளது. 30 ஆண்டு யுத்தத்தின் பின்னர் இலங்கையில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

தாமும், பிரதமர் டோனி அப்போடும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நீண்ட கால அடிப்படையில் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை எதிர்நோக்கி வரும் சவால்களுக்கு தீர்வு வழங்க பிராந்திய வலய நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் ஏனைய உலக நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

## கச்சதீவில் இறங்கிய தனிநபர் கைது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து கச்சதீவிற்கு படகில் வந்திறங்கிய நபர் ஒருவரை இலங்கை கடற்படையினர் பிடித்து கடந்த 24 ஆம் திகதி ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கே.கே.எஸ். பொலிஸ் அத்தியட்சகர் இந்தத் தகவலை வெளியிட்டார். இந்நபர் தற்சமயம் பொலிஸாரினால்

19 ஆம் பக்கம் பார்க்க

06

தொல்லை

15

கௌரவிப்பு

17

ஆரம்பம்

## வலி. வடக்கில் வீடுகள் தகர்ப்பு நிறுத்தம்

### ஜனாதிபதியின் செயலாளர் தகவல்

(கொழும்பு)

வலிகாமம் வடக்கில் படையினரால் பொதுமக்களின் வீடுகள் இடித்தழிக்கப்படுவதை நிறுத்துமாறு ஜனாதிபதி யாழ்ப்பாண கட்டளை தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார் என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். வலிகாமம் வடக்கில் பொதுமக்களின் வீடுகள் இடித்தழிக்கப்படுவது யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பாரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்தே ஜனாதிபதி யாழ்ப்பாண கட்டளைத் தளபதியுடனும், கொழும்பில் உள்ள இராணுவத் தளபதியுடனும் தொடர்பு கொண்டு இராணுவத்தின் நிர்மாணப்பணிகளை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளார் என்று லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

## மன்மோகன்சிங் யாழ். விஜயம் இன்னும் முடிவு இல்லை

(டில்லி)


இந்திய பிரதமரின் யாழ். விஜயம் குறித்து இன்னமும் இறுதிமுடிவு எடுக்கப்படவில்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அதேவேளை, வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் அழைப்பை இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் ஏற்றுக்கொண்டுள்ளார். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமரிடம், விக்னேஸ்வரன் கடிதம் ஊடாக கோரியிருந்தார். இந்தக் கோரிக்கையை பிரதமர் ஏற்றுக்கொண்டதாக இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு தமிழ் மக்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் பிரதமர் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள்

19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கின் வீதி அபிவிருத்தியில் மேலும் ஒரு செயற்திட்டம்




## அமைச்சரவை அனுமதி

(யாழ்ப்பாணம்)

வடக்கின் நெடுஞ்சாலைகளை புனரமைக்கும் விசேட செயற்திட்டத்திற்கு அமைய வட பகுதியிலுள்ள இரண்டு நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைவாக கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் - பண்ணை - ஊர்காவற்றுறை வீதியினைப் புனரமைப்பதற்காக அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## பங்களாதேஷ் பிரதமர் கொழும்பு வருவார்?

(கொழும்பு)



நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸினா கொழும்பு வரக்கூடுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்முட்டிச் சடலம்; சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ். நாச்சிமார்கோவில் தேர்முட்டிப்பகுதியில் பெண் கொலைச்சம்பவம் குறித்து சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதுடன் அந்தச் சம்பவம் தொடர்பாக ஆறு பேரது வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக கே.கே.எஸ். பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ந்து இந்தச் சம்பவம் குறித்து விசேட புலனாய்வு நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். அத்துடன் கைது செய்யப்பட்டவரது உடல்கூறு ரி.என்.ஏ. பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த பொலிஸ் அத்தியட்சகர், புத்தூர் சம்பவத்தில் சடலமாக கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட பெண் தற்கொலை புரிந்திருப்பதாகவே வைத்தியசாலை மற்றும் பொலிஸ அறிக்கைகள் தெரிவிப்பதாகவும்

19 ஆம் பக்கம் பார்க்க




## வாழ்வில் ஒளி பிறக்கட்டும்



(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் பண்டிகையான இன்றைய தீபாவளித் திருநாளில் மக்களின் வாழ்வில் இருள் அகன்று சுபீட்சமும் ஒளியும் பிறக்க எனது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# வேலணையின் அபிவிருத்திக்கு ஒன்றிணைந்து செயற்படுவோம்

## வேலணை பிரதேசசபை தவிசாளர்



(வேலணை)

வேலணையின் அபிவிருத்திக்கு ஒன்றிணைந்து செயற்படுவோம் என வேலணை பிரதேச சபை தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின் வேலணை பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை 9.00 மணிக்கு யா/வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரி தினமும், பரிசளிப்பு விழாவும், நுழைவாயில் கலைமாடம் திறப்பு நிகழ்வும், சரஸ்வதி சிலை திரைநீக்கும் வைபவமும் கல்லூரியின் அதிபர் சிவசாமி கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சரும், முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கௌரவ விருந்தினர்களாக வேலணை பிரதேசசபையின் தவிசாளரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமான சின்னையா சிவராசா, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், கல்லூரி தகமைசார் விருந்தினர்களாக தொழிலதிபர் எஸ். பி.சாமி, முன்னாள் கல்லூரி அதிபர் திருமதி பி.எம். அழகரத்தினம், பொதுத்திறைசேரி முகாமைத்துவக் கணக்காய்வு முன்னாள் பணிப்பாளரும் பாடசாலையின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவருமான க.மகாலிங்கம், தொழிலதிபர் சி.குகநாதன், வேலணை பிரதேசசபை உறுப்பினர் பா. தவபாலன், முன்னாள் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாக் கிருஷ்ணன், பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், மாணவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வில் உரையாற்றிய வேலணை பிரதேச சபை தவிசாளர் மேலும் தெரிவிக்கையில், இன்று வேலணை அபிவிருத்திப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது தற்போது எமக்கு முதலமைச்சர் கிடைத்திருக்கின்றார் முதன்முதலாக வேலணைக்கு வருகை தந்திருக்கும் அவரை எமது பிரதேசசபையின் சார்பில் வரவேற்பதோடு வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் தற்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் 100 மில்லியன் நிதியைப் பெற்றுத்தந்திருக்கின்றார். அதற்குரிய வேலைத்திட்டங்களுக்குரிய வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதை நீங்கள் யாவரும் பத்திரிகைகளுடாக அறிந்திருப்பீர்கள்.

இனிவரும் காலங்களில் தீவகத்தின் கல்வி மட்டத்தினையும், அபிவிருத்தியினையும் ஒன்றிணைந்து உயர்த்த அனைவரும் பாடுபட்டு உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, ஆசிரியர் பற்றாக்குறையினையும் வடமாகாணக் கல்வி அமைச்சர் நிவர்த்தி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு, ஊர்காவற்றுறை - யாழ்ப்பாண வீதியை காப்பெற் வீதியாக மாற்றுவதற்கு வேலைகள் ஆரம்பிப்பதற்காக ஊழியர்கள் தங்கி நிற்பதற்கு வீடு ஒன்றினை வாடகைக்கு பெற்றுத் தருமாறு கூறியிருக்கிறார்கள் அவ் வேலைத்திட்டம் வருகின்ற வருடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

# இன்று மக்கள் வங்கிச் சேவை

(யாழ்ப்பாணம்)

தீபாவளிப் பண்டிகையினை முன்னிட்டு மக்கள் வங்கியின் சாவகச்சேரிக்கிளை, சங்கானைக் கிளை, வல்வெட்டித்துறைக் கிளை என்பன இன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை விசேட வாடிக்கையாளர் சேவைக்காகத் திறந்திருக்கும் என வங்கியின் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# இருள் அகலட்டும்



இனிமையான இந்த நன்நாளில் நம் இல்லங்கள் அன்பினாலும், மகிழ்வினாலும் பொங்கி பொலியட்டும். நீண்ட காலமாக நீடித்து வந்த பதற்றமும் நெருக்கடியும் நீங்கி பிறந்துள்ள அமைதியில் நாம் இனியவைகளை நிரப்புவோம்.

இவ்வாறு இன்றைய தீபத்திருநாளை முன்னிட்டு ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான எம்.சந்திரகுமார் வெளியிட்டிருக்கும் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

புத்தாடை அணிந்து, புதுப்பொலிவு கண்டு வாழும் இந்த நன்நாள் எல்லோருக்கும் மகிழ்ச்சியும், நிறைவும் தர நாம் அர்ப்பணித்து உழைப்போம். எல்லா இல்லங்களும் தீப ஒளியினாலும், மகிழ்ச்சியினாலும் நிறையட்டும். துயர இருள் நீங்கி மகிழ்ச்சியின் ஒளி பரவும் நாளாக இந்த நன்நாளைக் கொள்வோம். இந்த இனிய திருநாளில் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகட்டும் என அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# தீபாவளிப் பண்டிகையை மகிழ்வுடன் வரவேற்போம்



தமிழ் மக்களின் வாழ்வில் புதுவசந்தம் பிறந்திட்ட நற்சூழலில் துன்பம் எனும் இருளகன்ற தீபாவளிப் பண்டிகையை மகிழ்வுடன் வரவேற்போம் என வட மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கந்தசாமி கமலேந்திரன்(கமல்) தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

துன்பப்பட்டு - துயர் சுமந்த தமிழ் மக்களின் வாழ்வில் சுபீட்சம் நிலவி புதுவசந்தம் பிறந்திட்ட நிலையில் புதுமலர்வை ஏற்படுத்தும் திருநாளாக தீபாவளித் திருநாள் அமையட்டும்.

தமிழ் மக்களிற்கு புதியதும் மகிழ்ச்சியான, அமைதியானதுமான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக நாம் உங்களுடன் இணைந்து தொடர்ந்தும் உழைத்து வருகிறோம். ஓர் உன்னத நோக்கத்திற்காக பயணிக்கும் எமது அரசியற் பயணம் இன்னும் உங்கள் உயர்விற்காய் தொடரும்.

எம்மவர்களின் ஒற்றுமைக்கு இடையூறாக இருந்துவந்த நிரந்தர பகைமைகள் நீங்கி புத்துயிர் பெற்று புதிய உறவுகள் நீடித்து நிலையான அமைதியான வாழ்வுக்கு இத் தீபாவளி திருநாள் வழியை ஏற்படுத்தித் தர இந்நாளில் உறுதிகொண்டு அனைத்து தமிழ்பேசும் மக்களுக்கும் தீபத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

# பண மோசடியில் ஈடுபட்ட பெண்களுக்கு வலை வீச்சு

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கரவெட்டியைச் சேர்ந்த இளைஞரை இத்தாலிக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி 9 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று மோசடியில் ஈடுபட்ட வரணி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் தேடப்பட்டு வருவதாக காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்தே குறித்த பெண்கள் இருவரும் தேடப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற மற்றுமொரு முறைப்பாட்டில் 90 ஆயிரம் ரூபா பெறுமதியான பல்ஷர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்றைக் களவாடியது தொடர்பில் உடுத்துறை தாளையடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் பாரப்படுத்தியதாகவும் பருத்தித்துறை நீதிமன்றம் இந்த இளைஞனை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

ஜயோதா

சீட்டிழுப்பு இலக்கம் 1004

திகதி 31.10.2013

10 17 31 33 S

ஜக்பொட் பரிசு ரூ. 12,140,220/=

(C/3185)

# தீபாவளியை முன்னிட்டு முதியோர்களுக்கு உடுபுடைவை

(திருநெல்வேலி)

கைதடி அரச முதியோர் இல்ல முதியவர்களுக்குத் தீபாவளியை முன்னிட்டு உடுபுடைவைகள் வழங்கப்பட்டுள்ளன.

முதியோர் இல்ல நலன்புரிச் சங்கத்தின் மூலம் நேற்று முன்தினம் இவை வழங்கப்பட்டன.

ஆண்களுக்கு ஒரு சாரம், சேட், வேட்டி என்பனவும், பெண்களுக்கு சேலை, கவுண் போன்றவையும் வழங்கப்பட்டன.

தீபாவளி தினமான இன்று மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினரால் இல்ல முதியவர்களுக்கு விசேட உணவு வகைகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் கைவிஷேசமும் வழங்கப்படும். முதியவர்களை மகிழ்விக்கும் நோக்குடன் பல கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

முதியோர் இல்லத்தில் முதியோர் தொடர்பான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் பெற்றுக்கொள்வதற்காகப் பெருமளவான முதியோர்களும், நலன் விரும்பிகளும் வருகை தருகின்றனர்.

சமூகத்தில் வைத்து முதியவர்கள் பராமரிக்கப்பட வேண்டும் என்னும் விழிப்புணர்வின் விளைவாக இந்நிகழ்வுகள் இடம்பெற்றன. (137)

# தேவன்பிட்டி கிராம மக்களின் நீண்டநாள் கனவு நனவாகியது



(மன்னார்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்ட " சோஆ " நிறுவனத்தினால் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேவன்பிட்டி கிராமத்தில் அமைக்கப்பட்ட பாலம் திறந்துவைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது

ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய சுமார் 2.7 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் அக்கிராம மக்களின் பங்களிப்புடன் குறித்த பாலம் மன்னார் மாவட்ட " சோஆ " நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டது

இந்த நிலையில் நேற்று முன்தினம் மு.ப 10.30 மணியளவில் குறித்த பாலம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவர் டேவிற் டாலி, ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாட்டு பிரிவுக்கான தலைவர் வில்லி வடன் பேக், நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்தி பிரிவு முகாமையாளர் லெஸ்லி ஜேசுராஜன், சோஆ நிறுவனத்தின் இலங்கைக்கான நன்கொடைப்பிரிவின் தலைவி றெபேக்கா ஓவன், மன்னார் மாவட்ட "சோஆ" நிறுவனத்தின் முகாமையாளர் ஜோச் அந்தோனிப்பிள்ளை, மன்னார் மாவட்ட கடற் றொழில உதவிப்பணிப்பாளர் வி . எஸ் . மொராண்டா, மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக அலுவலகர் முஹமட் ஹஜிக், கரையோரப் பாதுகாப்பு திணைக்கள திட்டமிடல் அலுவலகர் முஹமட் ஹலிம், தேவன் பிட்டி பங்குத்தந்தை நேரு ஆகியோர கலந்து கொண்டு குறித்த பாலத்தினை திறந்து வைத்தனர்.

இதனைத்தொடர்ந்து கிராம மக்களுக்கும் வருகை தந்த அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது .

இதன் போது ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவர் டேவிற் டாலிக்கு குறித்த தேவன்பிட்டி கிராம மக்கள் சார்பாக நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

## அடித்துத் துன்புறுத்திய தந்தைக்கு சிறை

முல்லைத்தீவு தொட்டியடிப்பகுதியில் தனது 11 வயது மகள் பாடசாலைக்குச் செல்லவில்லை எனக் கூறி மரத்தில் கட்டிவைத்து கடுமையாக அடித்து துன்புறுத்திய தந்தைக்கு 6 மாதகால சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மகள் பொலிஸாருக்கு கொடுத்த முறைப்பாட்டினடிப்படையில் தொடரப்பட்ட வழக்கில் தந்தை தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தந்தைக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதகால சிறைத்தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (170)

## கமநல சேவை நிலையத்தில் திருட்டு

முழங்காவில் கமநல சேவை நிலையத்தில் சுமார் முப்பதாயிரம் ரூபா பெறுமதியுடைய நீர் இறைக்கும் இயந்திரம் உட்பட வேறுபொருள்களையும் திருடர்கள் திருடிச் சென்றுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் சென்றவாரம் இடம்பெற்றுள்ளது. இது சம்பந்தமாக முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் புலன் விசாரணையில் ஈடுபட் டுள்ளனர்.

இந்த நிலையத்துக்கென ஒரு தற்காலிக காவலாளி இருந்தும் நிலையவளாகம் வேலிகள் எதுவும் இல்லாத நிலையில் பாதுகாப்பற்றதாக இருந்ததெனவும் தெரிய வருகிறது.

(112)

## கரவெட்டியில் சுகாதாரமற்ற உணவகங்களுக்கு அபராதம்

(திருநெல்வேலி)

கரவெட்டி பகுதியில் உள்ள மூன்று உணவகங்களுக்குப் பருத்தித்துறை நீதிமன்றம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தது. உடல் நலத்துக்கு ஒவ்வாத வகையில் உணவு களஞ்சியப்படுத்தியமை உணவு தயாரிக்கும் போது வாயில் வெற்றிலை பாக்கு மென்றமை போன்ற குற்றங்கள் இந்த உணவு நிலையங்களின் மீது சுமத்தப்பட்டிருந்தன.

நெல்லியடி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.சுதோகுமார், பொது சுகாதாரப் பரிசோதகர் சு.ரவிவர்மா, மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் செ.நாகேந்திரன் ஆகியோர் இணைந்து கரவெட்டி பகுதியில் நடத்திய திடீர் அதிரடி சோதனையில் இந்த உணவகங்கள் மாட்டிக் கொண்டன.

சுகாதாரமற்ற முறையில் உணவு களஞ்சியப்படுத்திய உணவக உரிமையாளருக்கு 5000 ரூபா அபராதமும், உணவு தயாரிக்கும் போது வெற்றிலைபாக்கு வாய்க்குள் வைத்து மென்றுகொண்டிருந்த ஊழியர்கள் இருவருக்கு தலா 3000 ரூபா அபராதமும் விதித்து கடந்த திங்கட்கிழமை பருத்தித் துறை நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் தீர்ப்பு வழங்கினார். (137)

## இடமாற்றம்

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவில் பணியாற்றிய வைத்திய கலாநிதி திருமதி கலைச்செல்வி திலீபன் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகவும், வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ( 01)

## படித்தவன் சூதும் வாதும் செய்தால்...




சும்மா சொல்லக் கூடாது, தமிழ் அரசியல்வாதிகளையும் விட, தீரமும் வீரமும் மிக்க போராளிகளையும் விட தமிழ் அதிகாரிகள் பெரும் விண்ணர்கள்.

போர் நடந்த காலத்தில் அரசுக்கும் தண்ணி காட்டி புலிகளுக்கும் தண்ணி காட்டியவர்கள்.
ஒரு பக்கம் அரசாங்கத்தின் மீதான விசுவாசம். மறுபக்கம் போராட்டப் பற்று. புலிகள் மீதான கரிசனை.

இப்படி இரண்டு தரப்பிற்கும் போக்குக் காட்டிக்கொண்டு தங்கள் பதவி-களையும், பதவியுயர்வுகளையும் பார்த்துக் கொண்டவர்கள்.

உக்கிரமான யுத்தம் நடந்துகொண்டிருக்கும் போது, சனங்கள் இழப்புகளை சந்தித்துக் கொண்டிருந்த வேளை இவர்கள் தங்களை உயர்த்திக்கொண்டார்கள்.

பெற்றுக்கொண்ட உயர்வுகளின் வழியாக புலிகளையும் அரசையும் பாவித்து லாபங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

இதேவேளை அரசும் இவர்களை நம்பியது, புலிகளும் இவர்களை நம்பினார்கள். அல்லது இரண்டு தரப்பையும் அப்படி நம்ப வைத்தார்கள்.

மட்டுமல்ல மூன்றாவது தரப்பாகிய தொண்டு நிறுவனங்களையும் அரவணைத்து அவர்களைக் கொண்டும் காரியங்களை சாதித்தார்கள்.

இடையில் சிலர் கவர்னரையும் ஆட்டிப் படைத்தார்கள்.

இதற்கெல்லாம் ஏராளம் உதாரணங்கள் உண்டு. ஒன்று பாதிக்கப்பட்ட பிரதேசங்களாகிய வடமராட்சி கிழக்கு, வலி வடக்கு, தீவகம் போன்ற இடங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை விட நகர் மையத்திற்கு ஒதுக்கப்படும் நிதி அதிகம்.

இதனால் புழுதித் தெருக்கள் புழுதியாகவே இருந்தன. இருண்ட ஊர்கள் இருண்டதாகவே இருந்தன. தாருக்கு மேல் தாரை ஊற்றி தங்கள் ஊர்களை வளப்படுத்தினார்கள்.

பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய திட்டங்களை முடிந்தவரை தவிர்த்தார்கள்.

வடமாகாண சபையை வன்னியை விட்டு யாழ்ப்பாணத்திற்கு கொண்டு சென்றார்கள்.

அங்கே தங்கள் உறவினர்களின் வீடுகளை பெரும் வாடகைக்கு அமர்த்தி மாகாண நிர்வாகத்தை நடத்தினார்கள்.

அதைப்போல தங்கள் வீடுகளையும் தொண்டு நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுத்துவிட்டு அருகிலுள்ள அரச விடுதிகளில் தாங்கள் குடியேறினார்கள்.

தேவை அதிகமுள்ள சனங்ளை விட வசதி உள்ளோருக்கு உதவித் திட்டங்களையும், வீட்டுத் திட்டங்களையும் வழங்கினார்கள்.

உடைந்த குளங்கள், சிதைந்த தெருக்கள், அழிந்த பள்ளிக்கூடங்கள், பாழடைந்த ஊர்கள் எல்லாவற்றையும் மீளக்கட்டியெழுப்புகிறோம் என்று தாராளமாய் பேரம் பேசி ஒப்பந்தகாரர்களிடம் கப்பம் வாங்கினார்கள்.

இப்படியே ஏராளமாய் சொல்லிக்கொண்டே போகலாம்.

காதிலே பூ வைப்பதைவிட காதிலே துளை போட்டு பூ வைக்கும் சூழியர்கள்.

உண்மையில் அரசியல்வாதிகளின் கைகளிலே அதிகாரத்தைக் கொடுப்பதைவிட இந்த அதிகாரிகளின் கைகளிலே அதிகாரத்தைக் கொடுத்தால் இவர்கள் அதிபரின் உள்ளாடையைக் கூட கொண்டு வந்து விடுவார்கள்.

ஆமாம் அரசியல் அதிகாரத்தை மட்டுமல்ல அமெரிக்காவையே தங்கள் காலடியில் பணிய வைத்துவிடுவார்கள்.

ஒரு காலத்தில் விடுதலைப் போராட்டம் தீவிரம் பெற்று அதிலே இளைய தலைமுறையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் இணைந்த போது, அந்த நெருக்கடிச் சூழலில் எப்படியோ சுழித்துக் கொண்டு, மிகக் கவனமாக தங்கள் படிப்பைத் தொடஉந்து பட்டம் பெற்று பதவிகளைப் பிடித்தவர்கள் அல்லவா!

அப்படிச் சுழிக்கும் வல்லமையுள்ளவர்களே இன்றைய பெரும்பாலான அதிகாரிகள்.

இதேவேளை விரல்விட்டு எண்ணக்கூடிய சில அதிகாரிகள் தங்கள் வாழ்வையே சனங்களுக்காகவும், மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அுப்பணித்திருக்கிறார்கள்.

இந்த வறண்ட பாலையிலும் ஈரம் இருப்பது இவ்வாறான சிலரால்தான்.

மற்றும்படி வறண்ட கோடைதான் எங்கள் சூழலில்.

இப்போது மாகாண சபை வந்துள்ளது மத்திய அரசின் நிர்வாகமும் உள்ளது. இனி இரண்டையும் சுழித்துக்கொண்டு இவர்களின் படகுகள் ஓடும்.

தேசப்பற்றுக்கும் ஜயோ! அரச விசுவாசத்திற்கும் ஜயோ!! அரசியல் உரிமைக்கும் ஜயோ!!! போராட்டத்திற்கும் ஜயோ!!!!

கவலை நம் சவப்பெட்டிக்கு ஓர் ஆணி சேர்க்கிறது. கலகல வெனும் சிரிப்பு ஓர் ஆணியை கழற்றுகிறது -பீட்டர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இனிய வாழ்த்துக்கள்!

இன்று தீபாவளி. இந்துக்களுக்கு விசேடமான பண்டிகை நாள். எல்லா நாட்களும் ஒன்று போல இருந்தால் வாழ்க்கை சகிக்க முடியாததாகி விடும். இதனால்தான் திருவிழாக்களும் பண்டிகைகளும்.

துயரங்கள் மனக்கவலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, மகிழ்ச்சியையும் கொண்டாட்டத்தையும் ஏற்படுத்திக் கொள்ள நம் முன்னோர் வகுத்துக்கொண்ட நாட்கள் இவை.

மனித வாழ்க்கையை பின்னுக்குத் திரும்பிப் பார்க்கும் ஒருவர் ஒன்றை உணர முடியும், களியாட்டங்களும் கொண்டாட்டங்களும் இயல்பாக அமைவது மிக மிக அபூர்வம். ஆனந்தம் பெரும்பாலும் தானாக நிகழ்வதே இல்லை. தேடிச்சென்றால் மட்டுமே கிடைக்கிறது அது.

மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு அதற்காக முயல்பவர்களே மகிழ்ச்சியை அடைகிறார்கள். அதற்காக உருவாக்கிக் கொண்டவையே பண்டிகைகள், திருவிழாக்கள்.

ஒரு மகாபாரதக் கதை இருக்கிறது. கண்ணனை சந்திக்க தருமரும் துரியோதனனும் சென்றார்கள். உலகில் நல்லவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கண்ணன் அவர்களிடம் கருத்து கேட்டாராம். ஒரு நல்லவன் கூட கிடையாது எல்லாரும் அயோக்கியன்தான் என்றான் துரியோதனன்.

எல்லாரும் நல்லவர்கள்தான். கெட்டவர்களே இல்லையே என்றான் தருமன். எதுவும் அவரவர் பார்வையைப் பொறுத்தே கிடைக்கிறது. ஆனந்தமும் அப்படியே.

மகிழ்ச்சியாக இருப்பதற்கு தடைகள் இல்லாதபோது மகிழ்ச்சியாகவே இருப்போம் என்பதே இயல்பான மனநிலை. அதையே நாம் பயின்று உருவாக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மகிழ்ச்சியாக இருப்பதற்குத் தடையாக இருப்பவற்றை அறிந்து விலக்கியும் நாம் முன் ஏக வேண்டும்.

சின்னஞ்சிறு விஷயங்களில் உள்ளது மகிழ்ச்சி. அதை அறியும்படி நம் மனதை வைத்துக்கொண்டாலே போதுமானது. மகிழ்ச்சிக்கான ஏற்பாடுகள், காரணங்களை உண்டு பண்ணுவதே முக்கியம். பண்டிகைகளும் திருவிழாக்களும் நம் முன்னோர் நமக்கு அதற்கென உருவாக்கியளித்த கொண்டாட்டங்கள்.

அனைத்துக்கும் மேலாக எல்லாப் பண்டிகைகளும் குழந்தைகளுக்கானவை. அவர்கள் உற்சாகம் கொள்வதற்கான தருணங்களை உருவாக்கித் தருபவை இந்த விழா நாட்கள்.

பெரியவர்கள் தங்கள் உலகை விட்டு கொஞ்சம் குழந்தைகளின் உலகுக்குள் இறங்கிவருவதற்கானவை. நாம் நம் பெற்றோரின் நினைவை நம் பிள்ளைகளுக்கு அளிப்பதற்கானவை.

மகிழ்ச்சியாக இருப்பதற்கும், உற்சாகம் கொள்வதற்குமான காரணங்கள் அனைத்துமே முக்கியமானவை.

குறிப்பாக சிறு குழந்தைகளின் வாழ்க்கையில் பண்டிகைகள் உருவாக்கும் உவகை சாதாரணமல்ல. இளமையில் பண்டிகைகளை இழந்தவர்கள் பின்பு ஒருபோதும் ஈட்ட முடியாத செல்வமொன்றை தவறவிடுகிறார்கள். அந்த இழப்பை நாம் குழந்தைகளுக்கு வழங்க வேண்டாம்.

ஊருடன் சேர்ந்து ஒரு கொண்டாட்டத்தில் ஈடுபடுவதும், அதுபற்றிய எதிர்பார்ப்புகளில் பல நாட்கள் திளைப்பதுமான, நம் பெற்றோர் நமக்களித்த அந்த சந்தோஷத் தருணங்களை நம் பிள்ளைகளுக்கும் வழங்குவோம்.

மகிழ்ச்சியை அடைவதற்கும் பிறருக்குக் கொடுப்பதற்கும் கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளவே பண்டிகைகள். அத்தனையும் பயன்படுத்தி வாழ்வைக் கொண்டாடுவோம். இனிய தீபாவளி வாழ்த்துக்கள்! - ஆசிரியர்

# இராணுவத்தை வெளியேற்றுமாறு வடக்கு மாகாணசபை கோரமுடியாது

## என்கிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு வட மாகாண சபையினால் கோரிக்கை விடுக்க முடியாது. அது மாகாண சபை விடயதானத்துக்கு அப்பாற்பட்டது என்பதைக் கூட கூட்டமைப்பினால் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது என்று ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றுவது அரசாங்கத்தின் கடமை என்று வட மாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தமை குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உதய கம்மன்பில இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

வடமாகாண சபையை கைப்பற்றியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறான கோரிக்கை களை முன்வைக்கும் என்பது எமக்குத் தெரியும். எனவேதான் வடக்குத் தேர்தலுக்கு முன்னதாக 13 ஆவது திருத்தச் சட்டத்தின் சில அதிகாரங்களை நீக்குமாறு வலியுறுத்தி வந்தோம்.

இதேவேளை 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இல்லாத விடயங்களையே வடமாகாண முதலமைச்சர் தனது முதல் உரையில் கூறியுள்ளார்.

அதாவது வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு வடமாகாண சபையினால் கோரிக்கை விடுக்க முடியாது. அது மாகாண சபை விடயதானத்துக்கு அப்பாற்பட்டது.

இராணுவம் எங்கு இருக்க வேண்டும் என்பதனை நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் ஜனாதிபதியே தீர்மானிப்பார். அதில் எவரும் தலையிட முடியாது. இது மாகாண சபையுடன் தொடர்புறாத விடயம்.

இது இவ்வாறிருக்க மாகாண சபைக்குரிய ஆளுநரை நியமிப்பது ஜனாதிபதியாகும். ஜனாதிபதியின் பிரதிநிதியாகவே ஆளுநர் நியமிக்கப்படுகின்றார். ஜனாதிபதி தனக்கு தேவையானவரையே வடமாகாண சபையின் ஆளுநராக நியமிப்பார்.

ஆளுநரை விலக்க வேண்டுமாயின் அதற்கென அரசியலமைப்பில் ஒரு முறைமை காணபபடுகின்றது. அதனை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கலாம். அதனைவிடுத்து ஆளுநரை விலக்கவேண்டும் என்று கோருவதில் அர்த்தம் இல்லை.

சட்டம் தெரிந்தவர்கள் வடக்கு மாகாண சபையில் இருந்த போதிலும் இந்த விடயம் தெரியாமல் உள்ளனர் என்றார்.

# அதிகூடிய விலையில் பொருள் விற்பனை கிளி.வர்த்தகர்களுக்கு அபராதம்

கிளிநொச்சிப் பகுதியில் அதிகூடிய விலைகளில் பொருட்களை விற்பனை செய்த மற்றும் காலாவதியான பொருட்களை காட்சிப்படுத்தி வைத்திருந்த ஆறு வர்த்தகர்களுக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தினால் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி ஏ - 9 வீதியில் பரந்தன் முதல் தருமபுரம் வரையான பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த வாரம் விலைக்கட்டுப்பாட்டு பகுதியினர் திடீர் சோதனை நடவடிக்கைகளினை மேற்கொண்டனர்.

இதில் அதிகூடிய விலையில் பொருட்களை விற்பனை செய்தமை மற்றும் காலாவதியான பொருட்களை விற்பனைக்கு காட்சிப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுடன் தொடர்புபட்ட ஆறு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகளை பதிவு செய்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, மேற்படி வர்த்தகர்களை கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி குறித்த வர்த்தகர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் 6 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்தார்.

# பொறுப்பற்ற விதத்தில் நடக்கும் ஒப்பந்த நிறுவனங்களின் ஊழியர்கள்

(அச்சுவேலி)

மின் மார்க்கங்களில் மின்வழங்கல் செயற்பாடுகளுக்கு இடையூறான வகையில் அமைந்துள்ள தாவரப் பகுதிகளை வெட்டியகற்றும் ஒப்பந்த நிறுவனங்களின் ஊழியர்கள் தாவரங்களில் இருந்து வெட்டியகற்றும் குழைகளுடனான கதியால்கள், ஓலைகள் போன்றவற்றை பொறுப்பற்ற விதத்தில் வீதியோரங்களில் போட்டு விட்டுச் செல்வதால் அவ்வீதிகளினுடாக பயணம் செய்யும் பாதசாரிகள் மற்றும் ஏனைய வாகனப் பயணிகள் பெரும் இடைஞ்சல்களுக்கு மத்தியிலேயே தம்து பயணத்தினை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பிரதான வீதியோரங்கள், சிறு ஒழுங்கைகளின் ஓரங்களில் உள்ள மின் கேபிள்களுக்கு இடையூறாக உள்ள தாவரங்கள் மற்றும் அவற்றின் பகுதிகளை வெட்டியகற்றி அவ்விடங்களிலேயே போட்டு விட்டுச் செல்வதால் இக்கழிவுப் பொருட்கள் வீதியின் பெரும்பகுதியை ஆக்கிரமித்த வண்ணம் காணப்படுவதால் பிரயாணத்திற்கு அவை பெரும் இடையூறாக அமைந்துள்ளது. எனவே அவற்றை அவ்விடங்களில் இருந்து உடனுக்குடன் அகற்றி போக்குவரத்துக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டுமென பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (03)

# கிளைமோர் மீட்பு; நபருக்கு விளக்கமறியல்

முள்ளியவளை பூதநகர் பகுதியில் 14கிலோ 8கிராம் நிறைகளுடைய 3 கிளைமோர் குண்டுகளை வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவரை பயங்கர ஆயுதங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கட்டளையிட்டுள்ளார்.

குடிபோதையில் தான் கிளைமோர் என்று அறியாது மீன்பிடிக்கும் நோக்கத்திற்காக தான் அதனை எடுத்ததாக சந்தேகநபர் மன்றில் குறிப்பிட்டுள்ளார். (170)

# ஒக்ரோபர் மாதத்தில் மட்டும் 46 பேருக்கு டெங்குத் தொற்று

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒக்ரோபர் மாதம் டெங்கு நோய்த் தொற்றிற்கு இலக்காகிய 46 பேர் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலையின் புள்ளி விபரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் பல்வேறு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்தே இவர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை இந்த வருடத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் வரையும் 497 அக அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் மழைகாலம் ஆரம்பித்திருப்பதன் காரணமாக மேலும் இந்த நோய்த்தாக்கம் வரும் மாதங்களில் அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாக சுகாதாரப்பகுதியினர் எச்சரித்துள்ளதுடன் இந்த நோய்க்காவலியான நுளம்பு பெருக்கத்தைக்கட்டுப்படுத்தும் முகமாக நீர் தேங்கும் பகுதியினை மூடியும் சிரமதானப் பணிகள் போன்றவற்றை மேற்கொண்டு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (பா)

# விளையாட்டு மருத்துவம் - இது விளையாட்டு அல்ல!

டாக்டர் ஏ. சுபேர்கான் (விளையாட்டு மருத்துவ அறுவை சிகிச்சை நிபுணர்)

**குழந்தைகளை விளையாட்டு வீரனாக்க விரும்பும் பெற்றோர், விளையாட்டுத் துறை மருத்துவர்கள் மூலம் அவர்களது உடல் தகுதியை முழுமையாக, விளையாட்டுத்துறை கண்ணோட்டத்தில் பரிசோதிக்க அனுமதித்து, உடற்தகுதியை உறுதி செய்யவேண்டும். அதன் பிறகு அவன் ஈடுபடும் விளையாட்டுக்கு தகுந்தபடி பரிந்துரைக்கப்படும் உணவை வழங்குங்கள். அத்தோடு எந்த விளையாட்டில் எப்படி காயம் ஏற்படும்? காயம் ஏற்படாமல் விளையாடுவது எப்படி? என்பதையும் அதற்குரிய நிபுணர்கள் மூலம் அறிந்துகொள்ளுங்கள். அதைவிட முக்கியம் விளையாட்டில் காயம் ஏற்பட்டால், உடனடியாக என்ன முதலுதவி பெறவேண்டும், எந்த துறையை சார்ந்தவர்களிடம் அதற்குரிய சிகிச்சையை பெறவேண்டும் என்பதையும் தெரிந்துவைத்துக் கொள்ளுங்கள்.**

ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் விளையாடுவது முக்கியமானது. அவர்கள் காயம் ஏற்படாத அளவுக்கு விளையாடுவது மிக முக்கிய மானது. காயம் ஏற்பட்டாலும் அதை கவனித்து உடனடியாக சரியான சிகிச்சை பெறுவது அதைவிட முக்கியமானது.

தற்போது குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு பெற்றோர் அதிக முக்கியத்துவம் கொடுக் கிறார்கள். தினமும் குறிப்பிட்ட நேரம் அவர்களை விளையாட வைக்கிறார்கள். குறிப்பிட்ட சதவீதத்தினர் தங்கள் குழந்தை கள் எதிர்காலத்தில் சிறந்த விளையாட்டு வீரராக வேண்டும் என்று விரும்பி அதற்குரிய முறையான பயிற்சிகளுக்கும் அனுப்புகிறார்கள்.

ஒருவர் பொழுதுபோக்குக்காக விளையாடுவதற்கும், போட்டிக்காக விளை யாடுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. பொழுது போக்குக்காகவோ, உடற்பயிற்சிக்காகவோ விளையாடும்போது பெருமளவு வலுவைக்காட்டி போராடவேண்டியதில்லை. ஆனால் போட்டிக்கு தயா ராகி விளையாடும்போது வலுவைக்காட்டி போராடி வெல்லவேண்டியதிருக்கிறது. அதற்கு தகுந்தபடி தங்கள் உடல் வலு இருக்கவேண்டும் என்பதை பெரும்பாலானவர்கள் உணருவதில்லை. உடல் வலுவை ஆராயாமல் மேலோட்டமாக பார்த்துவிட்டு ஆள் பார்க்க நன்றாகத்தானே இருக்கிறார். நன்றாக விளை யாடுவார் என்று முடிவு செய்துவிடுகிறார்கள். அதனால் ஏற்படும் விபரீதங்களை நாம் அவ்வப்போது கேள்விப்படு கிறோம்.

சிறுவன் ஒருவன் விளையாட்டுப் போட்டியில் பங்குபெற்று ஓடிக்கொண்டே இருப்பான். இலக்கை நெருங்கும்போது வேகத்தை அதிகரிக்கும் அவன், திடீரென்று இதயத்தை பிடித்துக்கொண்டு சுருண்டு விழுந்துவிடுகிறான்.

ஓடிக்கொண்டே இருந்த சிறுவன் திடீரென்று இவ்வாறு சுருண்டு விழுவதற்கு என்ன காரணம்?


போட்டிக்கு, பயிற்சிக்கு தக்கபடி அவனது உடல் வலு இல்லாமல் இருந்ததுதான் காரணம்!

ஒருவரது இதயம் சாதாரண நிலையில் நிமிடத்திற்கு 72 முதல் 82 முறை துடிக்கும். அவரே போட்டிக்களத்தில் நின்று ஆக்ரோஷமாக விளையாடும்போது இதயத்துடிப்பு அதிகரித்துக் கொண்டே சென்று, 200 தடவைகூட துடிக்கும். அதை தாங்கும் அளவுக்கு அவரது இதயம் இருக்கிறதா? என்று, அவர் போட்டியில் கலந்துகொள்வதற்கு முன்பே பரிசோதிக்கவேண்டும். நுரை யீரலின் சக்தியும், கிட்னியின் செயல்திறனும் பரிசோதிக்கப்பட வேண்டும். பொதுவான உடல் ஆரோக்கியத்தையும் ஆராயவேண்டும்.

சிறுவர்கள் இப்போது எங்கு பார்த்தாலும் கிரிக்கெட் மட்டையும், பந்துமாக களம் இறங்கி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது இதயம், நுரையீரல், கிட்னி போன்றவை பலமாக இல்லாவிட்டால் அவர்களால் வலுவாக விளையாட முடியாது. இரத்தசோகை இருந்தால் சுறுசுறுப்பாக இயங்க முடியாது.

அதுபோன்ற பாதிப்புகளை அறி யாமல் உங்கள் குழந்தையை நீங்கள் விளையாட்டில் சேர்த்தால், அவன் சிறிது நேரத்திலே விளை யாட்டில் துவண்டுவிடுவான். பயிற்சியாளருக்கு அது புரியாமல் போகலாம். அவர், உன்னைப் போன்ற மற்ற சிறுவர்கள் நன்றாக விளையாடுகிறார்கள். உன்னால் மட்டும் ஏன் முடியவில்லை. முயற்சி செய் என்று தெம்பூட்டு வார். உடலில் தெம்பு இல்லாமல் அவன் கடும் முயற்சி எடுத்தால், விளைவு விபரீதமாகலாம்.

அதனால் குழந்தைகளை விளையாட்டு வீரனாக்க விரும்பும் பெற்றோர் விளையாட்டுத்துறை மருத்துவர்கள் மூலம் அவர்களது உடல் தகுதியை முழுமை யாக விளையாட்டுத்துறை கண்ணோட்டத்தில் பரிசோதிக்க அனுமதித்து, உடற்தகுதியை உறுதி செய்யவேண்டும்.



அதன் பிறகு அவன் ஈடுபடும் விளையாட்டுக்கு தகுந்தபடி பரிந்துரைக்கப்படும் உணவை வழங்குங்கள். அத்தோடு எந்த விளையாட்டில் எப்படி காயம் ஏற்படும்? காயம் ஏற்படாமல் விளையாடுவது எப்படி? என்பதையும் அதற்குரிய நிபுணர்கள் மூலம் அறிந்து கொள்ளுங்கள். அதைவிட முக்கியம் விளையாட்டில் காயம் ஏற்பட்டால் உடனடியாக என்ன முதலுதவி பெறவேண்டும், எந்த துறையை சார்ந்தவர்களிடம் அதற்குரிய சிகிச் சையை பெறவேண்டும் என்பதையும் தெரிந்துவைத்துக் கொள்ளுங்கள்.

பொதுவாக விளையாட்டுகளை இரு வகையாகப் பிரிக்கிறோம். ஒன்று: கொண்டக்ட் ஸ்போர்ட்ஸ், இரண்டு: நொன் கொண்டக்ட் ஸ்போர்ட்ஸ்.

களத்தில் நேரடியாக எதிர்கொண்டு மோதுவது, முதல் வகை. கபடி, ஹொக்கி, கால்பந்து, கூடைப்பந்து, ரக்பி, மல்யுத்தம் போன்றவை அதில் அடங்கும். இரண்டாவது வகையில் கிரிக்கெட், டென்னிஸ், பட்மிண்டன், கரப்பந்து போன்றவை இடம்பெறும். இதில் ஒவ்வொரு விளையாட்டுக்கு தகுந்தபடியும் ஏற்படும் காயங்கள் வித்தியாசப்படும்.

கிரிக்கெட் விளையாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். பந்து வீசும்போது தோள்பட்டைக்கு அதிக பளு ஏற்படுகிறது. பவுண்டரியை நோக்கிச் செல்லும் பந்தை தடுக்க ஓடும்போது பந்துவீச்சாளரின் கால்களுக்கு அதிக பளு ஏற்படுகிறது. பந்தை சிக்சருக்கு தூக்கும்போது துடுப்பாளரின் இரு கைகளுக்கும் அதிக பளு தோன்றுகிறது. உடலில் எந்தெந்த பகுதிக்கு அதிக பளு கொடுக்கப்படுகிறதோ அந்த பகுதி களில் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம். கிரிக்கெட் பந்து வேகமாக அடிவயிற்றில் பட்டால் தசை கிழிந்து, உயிரிழப்புகூட ஏற்படலாம். கண்களில் பட்டால் பார்வையிழப்பு உருவாகலாம். அதனால்தான் உடலில் பெரும்பாலான இடங்களில் பாதுகாப்பு பாட்களை பயன்படுத்துகிறார்கள். ஹெல்மெட்டையும் உபயோகிக் கிறார்கள்.

போட்டியின்போது அத்தனை பாதுகாப்பு முறைகளையும் கடை பிடிக்கும் வீரர்கள், பயிற்சியின்போது பாதுகாப்பில் அவ்வளவு அக்கறை கொள்வதில்லை. ஆனால் அதே பந்து, அதே மட்டையை வைத்துத்தான் பயிற்சி பெறுகிறார்கள். அதனால் பயிற்சியின் போதும் வீரர்களுக்கு காயம் ஏற்படுகிறது.

அவுஸ்ரேலியாவில் கிரிக்கெட் விளையாட்டில் அதிக காயம் அடைகிறவர்கள் யார் என்பது பற்றி ஒரு ஆய்வு நடந்தது. அதில் வேகப்பந்து வீச்சாளர்களுக்குத்தான் அதிக காயம் ஏற்படுகிறது என்று கண்டுபிடித்தார்கள்.

இதுபோன்ற ஆய்வுகள் ஸ்போர்ட்ஸ் மெடிசினில் ஏற்பட்டிருக்கும் நவீனங் களை குறிப்பிட்டு பாடசாலை-கல்லூரி மாணவர்கள் மற்றும் அவர்களது பயிற்சியாளர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் எந்தெந்த விளையாட்டில் எப்படி எப்படி காயம் ஏற்படும் என்பதையும், அதை தவிர்க்கும் முறைகளையும் கற்றுக்கொடுக்க வேண்டும். அதைப் பின்பற்றி அவர்கள் சரியாக விளையாடி-னாலும் காயங்கள் ஏற்படலாம். அப்படி காயங்கள் ஏற்பட்டால் அதற்கான முதலுதவி பற்றியும் அடுத்தகட்டமாக பெறவேண்டிய சிகிச்சைகள் பற்றியும் அவர் களிடம் விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். விளை யாட்டு வீரர்களின் மன நலனும் முக்கியம். அதுபற்றியும், அவர்களது உடல் நலம் பேணும் உணவுகள் பற்றியும் விளக்கிச் சொல்லப்பட வேண்டும்.

நவீன சிகிச்சைகளைப் பொறுத்த வரையில் முதலுதவியில் கிரையோதெரபி என்பது முக்கியமானது. பொதுவாக தசைப்பிடிப்பு, உள் இக்ரத்த கசிவுக்கு ஐஸ் கியூப்களால் ஒத்தடம் கொடுக்கப்படுகிறது. கிரையோதெரபி மூலம் உடலில் எந்த பகுதியில் காயம் ஏற்பட்டாலும் அந்த பகுதிக்கு குளிர்காற்றை தேவைக்கு தக்கபடி செலுத்தி, காயப் பகுதியை சீர் செய்யலாம். சத்திரசிகிச்சையை எடுத்துக் கொண்டால் நவீன கருவிகள் மூலம் ஓர்த்ரோஸ்கோபி செய்யலாம். இது தோள்பட்டை, கால் மூட்டு போன்ற பகுதிகளில் எளிதாக செய்யப்படும் ஒப்ரேஷனாகும்.

மூட்டில் காயம் என்றால், அங்கு ஒரு சிறிய துவாரத்தை உருவாக்கி, அதன் வழியாக பென்சில் வடிவமுள்ள ஓர்த்ரோஸ்கோப் கருவியை செலுத்தவேண்டும். அதில் லென்ஸ் மற்றும் வெளிச்சம் தரும் கட்டமைப்பு உண்டு. ஓர்த்ரோஸ்கோப்பை, டெலிவிஷன் கமெராவுடன் இணைக்கும்போது மூட்டின் உள் பாகத்தை தெள்ளத்தெளிவாக பார்க்க முடியும். அதன் மூலம் பாதிப்பை வெகு நுட்பமாக கண்டறிந்துவிடலாம். பின்பு சிறிய துவாரத்தின் வழியாக உபகரணங்களை செலுத்தி ஒப்ரேஷன் செய்துவிடலாம்.

நம் போன்ற வளரும் நாடுகளில் விளையாட்டுத்துறை வேகமாக வளர ஸ்போர்ட்ஸ் மெடிசின் பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் அவசியம் தேவை. சமூகம் இதில் விழிப்படைந்தால் நாடு ஆரோக்கிய மாக மாறும். விளையாட்டிலும் உயர்ந்த இடத்தைப் பிடிக்கும்!

# விடுதலைப்புலிகளை விடவும் ஆட்சியாளர்களால் அழிவு அதிகம்

## அமைச்சர் டளஸ்



(கொழும்பு)

நாட்டின் வரலாற்றில் நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு பிரிவினைவாத நோக்கில் செய்த அழிவுகளை விட அதிகமான அழிவுகளை செய்துள்ளதாக அமைசசர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போது அவர் இதனை கூறினார்.

இலங்கையில் எந்த அரசாங்கம் ஆட்சி செய்தாலும், தொழிற்கல்வி தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை.

அந்த கல்விமுறை தொடர்பில் அறியாமை அல்லது போதிய அளவில் புரிதல் இன்மை அல்லது தெரிந்துக் கொள்வதற்கான ஆர்வம் இன்மை போன்ற விடயங்களை சுட்டிக்காட்டலாம்.

தொழிற்கல்வி பற்றி சிந்திக்காமல், பல்கலைக்கழகம் சென்று வரவேண்டும் என்ற நோக்கம் மாத்திரமே இன்றைய இளைஞர்கள் மத்தியில் இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் கல்வித்துறையில் முன்னேற்றங்களை செய்யாததன் மூலம் நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தியுள்ளனர்.

எமது நாடு பின்னடைவான நிலைமையில் இருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். சோமாலியா, எத்தியோப்பியா, சூடான் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும் போது ஒவ்வொன்றும் வேறுப்பட்டது.

இதனால் எமது நாட்டின் பின்னடைவை வாத பிரதிவாதங்கள் ரீதியாகஏற்றுக்கொள்ள முடியாது.

சுகாதாரம் போன்ற பொதுவசதிககளை எடுத்துக் கொண்டால் இலங்கை உயர்ந்த நிலையில் உள்ளது. இந்த விடயங்களில் எத்தியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகள் மிகவும் கீழ் நிலையில் உள்ளன.

எமது நாட்டில் தொழில் கல்வியில் முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. 1893 ஆம் ஆண்டு தொழில் பயிற்சி கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் 100 வருடங்கள் கழிந்தே அதனை சீர்செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

# பொதுநலவாய மாநாட்டின்போது விசேட விடுமுறைகள் இல்லை

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாடு நடைபெறும் காலத்தில் விசேட விடுமுறைகள் கிடையாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் விசேட பொது விடுமுறைகளை அறிவிக்கும் திட்டம் எதுவுமில்லை என தெரிவித்துள்ளது. மக்களுக்கு விசேட விடுமுறைகளை வழங்கி மாநாட்டை நடாத்துவதில் அர்த்தமில்லை என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

மாநாடு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்காத வகையில் எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் நடைபெற்ற அரசாங்க உயர்மட்டக் கூட்டமொன்றின் போது பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாடு குறித்து விசேட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# துன்புறுத்தப்படும் சந்தேக நபர்கள்

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்தும் சந்தேக நபர்கள் துன்புறுத்தப்பட்டு வருவதாக மனித உரிமை கண்காணிப்பகம் அறிவித்துள்ளது. காணாமல் போதல்கள் தொடர்பில் 5000இற்கும் மேற்பட்ட சம்பவங்கள் குறித்த விசாரணைகள் நிலுவையில் இருப்பதாக கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருப்பதாகவும் இதனால் சந்தேக நபர் ஒருவரை குற்றச்சாட்டுக்கள் இன்றி 18 மாதங்கள் வரையில் தடுத்து வைக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளது. சந்தேக நபர்கள் துன்புறுத்தப்படுவதாகவும் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் முதல் இதுவரையில் இடம்பெற்ற சந்தேக நபர்கள் மீதான சித்திரவதைகள் குறித்த பத்து சம்பவங்கள் பற்றிய தகவல்களை மனித உரிமை கண்காணிப்பகம் வெளியிட்டுள்ளது.

தொடர்ந்தும் அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார். குறிப்பாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவித்துள்ளார்

# பொதுநலவாய மாநாடு இலங்கைக்கான கௌரவம்

## என்கிறார் ராஜித



பொதுநலவாய நாடுகளின் மாநாடு இலங்கையில் நடத்தப்படு வது நாட்டுக்கு கிடைத்த கௌரவம் என அமைச்சர் ராஜித சேனா ரட்ன தெரிவித்துள்ளார்.

பேருவளையில் நடைபெற்ற சந்திப்பொன்றில் அவர் இதனை கூறினார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு காரணமாக இலங்கை முழு உலகத்தின் கவனத்தை ஈர்க்கும். போரை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து வெளிநாடுகளின் தலைவர்கள் நேரில் கண்டறிந்து கொள்ள முடியும்.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு இலங்கைக்கு முதலீடுகள் வந்து குவியும் தங்க கதவு. ஜனாதிபதி இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தி, நாட்டை ஆசியாவின் அற்புதமாக மாற்ற நடவடிக்கை எடுத்து வரும் சந்தர்ப்பத்தில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. பொதுநலவாய நாடுகளின் மாநாடு காரணமாக நாட்டின் மனித வளம் உட்பட பல துறைகளில் அபிவிருத்திகள் ஏற்படும் என்றார்.

# வெளிவிவகாரக்கொள்கையில் விரைவில் வருகிறது மாற்றம்

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கைகளில் மாற்றம் செய்யப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். சுதந்திரத்திற்கு பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மூன்று தசாப்த காலத்திற்கு பின்னர் முதல் தடவையாக ஆசியாவில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு நடைபெறவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இராஜதந்திர அணுகுமுறைகள் மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுநலவாய மாநாட்டிற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



பொது நலவாய மாநாட்டிற்கான அனைத்து தயார்படுத்தல்களையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் .

அண்மையில் பொதுநலவாய மாநாடு தொடர்பான உபகுழுக்களின் மீளாய்வுக் கூட்டம் கொழும்பில் நடைபெற்ற வேளையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார் .

இம்மாதம் இலங்கையில் நடத்தப்படவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாடு மற்றும் மற்றைய மாநாடுகளுக்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் அரசாங்கத்தினால் தயார்படுததப்பட்டுள்ளன

. இதேவேளை இந்த மாநாடுகளில் கலந்து கொள்ளும் அரச தலைவர்கள், அமைச்சர்கள், பிரமுகர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஊடக வியலாளர்கள் அடங்கலாக சகலரும் இலங்கையில் சுற்றுப்பயணங்களை மேற்கொள்வதற்கு தேவையான வசதிகளும் அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார் .

பொதுநலவாய மாநாட்டின் அரச தலைவர்களின் மாநாடு இரண்டு நாட்களுக்கு கொழும்பில் நடைபெறும் அதேவேளை, அதற்கு சமாந்திரமாக 11 ஆம் திகதி முதல் 14 திகதி வரை பொதுநலவாய மக்கள் அமைப்பு மாநாடு ஹிக்கடுவையிலும் , 10 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை இளைஞர் மாநாடு அம்பாந்தோட்டையிலும் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளைஅரசாங்கம் முன்னெடுத்துள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார் .

# நாய்கள் தொல்லை

(கொழும்பு)

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் கட்டாக்காலி நாய்களினால் தொல்லை ஏற்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களின் சஞ்சரிப்பினால் இதுவரையில் இரண்டு வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என அதிவேக நெடுஞ்சாலையின் நிர்வாக உயரதிகாரி பீ.கே. ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் நூற்றுக்கும் மேற்பட்ட நாய்கள் வலைகளின் மூலம் பிடிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நடந்து சென்ற நபர் ஒருவர் சந்கேத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காரில் சென்ற நபர் காரிலிருந்து இறங்கி பாதையில் நடந்து சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாலியல் வன்முறைச் சம்பவங்கள் விசாரணை நடத்த கோரப்படும்

## என்கிறது பிரிட்டன்

யுத்தத்தின் பின்னரும் அதற்கு முன்னரும் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்படும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு இலங்கையிடம் கோரப்படும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு தாமும் பிரதமர் டேவிட் கமரூனும் இலங்கை அரசாங்கத்திடம் கோரவுள்ளதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகளை தவிர்க்குமாறும், கருத்து சுதந்திரத்திரத்தை உறுதி செய்யுமாறும் கோரப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். நேரடியாக இலங்கை அரசாங்கத்திடம் இந்த தகவல்களை பரிமாறிக் கொள்வது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பிரதமர் கமரூன் மற்றும் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் ஆகியோர் பங்கேற்க உள்ளனர். இலங்கையின் நிலைமைகளை நேரில் பார்வையிட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல் குறித்த குற்றச்சாட்டுக்களை முழுமையாக விசாரணை நடத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். சில விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், பல விடயங்களில் இன்னமும் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிரேஷ்ட தலைவர் பதவியை ஏற்க மறுக்கிறார் ரணில்



சிரேஸ்ட தலைவர் பதவியை ஏற்றக்கொள்ளப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். ஐக்கிய பிக்குகள் முன்னணியினால் கட்சியின் மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு எட்டு அம்ச யோசனைத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனைத் திட்டத்தில் கட்சித் தலைமைப் பதவியை புதிய ஒருவரிடம் ஒப்படைத்து, கட்சியின் சிரேஸ்ட தலைவர் பதவியை ரணில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. எனினும், இந்த யோசனைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என ரணில் அறிவித்துள்ளார்.

# தீபாவளி சிறப்பு மலர் - 2013

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



இன்று தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இத் தீபாவளிப் பண்டிகை தமிழ் மக்களுக்குரிய கொண்டாட்டங்களில் மிகச் சிறந்த இடத்தை வகிக்கின்றது. எல்லோராலும் விரும்பி வரவேற்றுக்கொண்டாடப் படுகின்ற தீபாவளியானது நரகாசுரனின் இறுதி விருப்பமாக வரம்பெற்று நிகழ்வது பெருமைக்குரிய தாகும்.

கொடுமைகள் செய்தே பழக்கப்பட்ட அவன் இறக்கும் தறுவாயில் ஸ்ரீ மகாவிஷ்ணுமூர்த்தியிடம் கேட்டுப் பெற்றுக்கொண்ட வரத்தின் பிரகாரம் இத்தீபாவளி மகிழ்ச்சிக்குரியதாகக் கூறப்பட்டது.

அந்த வகையில் தமிழ் மக்கள் எல்லோரும் ஒருமனதாக இத்தீபாவளிப் பண்டிகையைக்கொண்டாடி மகிழ்வதோடு புத்தாடையணிந்து புதுப்பொலிவுடன் இனிப்புப் பதார்த்தங்களைப் பரிமாறி உண்டு களித்து நலமுடனே வாழ்தல் வேண்டுமென பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்துக்கள் கூறி மகிழ்கின்றோம். எல்லாம் வல்ல இறையருளால் ஈழநாட்டில் வாழும் அனைத்து மக்களும் சிறப்புடன் மங்களகரமாக இருக்க வாழ்த்து கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத**
**தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய சுவாமிகள்**

## நல்லை ஆதீன சமயப் பிரசாரகரின் வாழ்த்துச்செய்தி



இன்று தீபாவளித் திருநாள். இது தமிழர்களின் இனிய பெருநாள். இன்றைய தீபாவளிக் கொண்டாட்டம் உற்றார், உறவினர்களுடன் மங்களகரமாகவிருக்க எமது நல் வாழ்த்துக்கள்.

இந்த இனிய தீபாவளியை தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாய், இனிய தீபாவளியே வருக! வருக!! என்று வரவேற்று உபசரித்துச் சுற்றம்சூழ அமர்ந்து இனிப்புப் பண்டங்களை உண்டு மகிழ வேண்டுமென்று ஆசி கூறி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இத்தீபாவளி நாளில் புத்தாடையணிந்து புனிதமாக ஆலயம் சென்று இறைவழிபாடியற்றி இன்பமாய் வாழ இறையாசி நல்கி இறும்பூதெய்தி வாழ்த்துகின்றேன்.

ஆண்டிலோர் தீபாவளியாம், அதை ஆண்டியும் கொண்டாட வேண்டுமாம் என்றபடி ஆனந்தமாகக் கொண்டாடி மகிழ என் நல் வாழ்த்துக்கள்.

இனிய தீபாவளியே! இன்பந்தர வருக!!
இறைவனைப் பிரார்த்தித்து வரவேற்று மகிழ்ந்து கொண்டாடுகின்றோம்.
வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை நாம் வாழ்த்தி மகிழ்கிறோம்.
வாழ்க தீபாவளி!

**இராசையா**
**ஸ்ரீதரன்**

## புத்தாடைப் பேறோ பெரிது

ஆணவம் காட்டும் அத்தனை வழவங்களையும்
அழித்தொழிப்பதுதான் தீபாவளி! - அதைப்
பேணியே புத்தாடை அணிபவர் யாவரும்
பூவுலகில் அற்புதப் பேறடைவரே!

காணவே ஆயிரம் தீபங்கள் வரிசை
காலமெல்லாம் வாழ ஒளிக் கீற்றாகுமே
ஏனையிலாடும் குழந்தைகள் மற்றும்
எல்லோருக்குமாக வேண்டும் தீபாவளி.

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.





## திருநாளாம் தீபாவளியே வாழீ!

நல்லதை நன்றி மறந்த
– தீபாவளித் திருநாள்
நல்லவர்க்கெல்லாம் நாடி விழுந்த
பொல்லாத காலத்து
– தீபாவளித் திருநாள்
வல்லவன் பம்பரம் வல்லி புரக்கோவில்
மணல் வினும் சுழரும்
– தீபாவளித் திருநாள்
மக்கள் என்றால் மக்கள் தான்
மனம் தளரா மாமேதைகள் கண்ட
– தீபாவளித்திருநாள்
மன்னனும் நீயே வடநாடும் உனதே
வளர்க வாழ்க புது தீபாவளித் திருநாள்
வாழீ! வாழீ
தீபாவளித் திருநாள்

கலைஞர்
ம.கணேசலிங்கம்

## தித்திக்கும் தீபாவளியே வருக!





இன்று தீபாவளித்திருநாள். இது ஓர் இனிய நல்ல நாளாகும். குடும்ப உறவுகள் ஒன்றுகூடி மகிழ்ச்சியுடனே மங்களகரமாக புதிய ஆடைகளை அணிந்து நல்ல சுவைமிக்க இனிப்புப் பதார்த்தங்களை உண்டு மகிழும் பொன்னான நன்னாள் இதுவாகும்.

இந்தத் தீபாவளி எப்படி வந்தது?

முன்பொரு முறை நரகாசுரன் என்னும் ஓர் அரக்கன் கொடுங்கோலாட்சி புரிந்தான். தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் மற்றும் குடிமக்களுக்கும் சொல்லொணாக் கொடுமைகள் இழைத்தான். அவனுடைய கொடுமையைத் தாங்க முடியாத தேவர்களும், முனிவர்களும், ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியிடம் போய் முறையிட்டனர்.

உடனே காத்தற் கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர் நரகாசுரனுடன் போர் செய்து தமது சக்கராயுதத்தால் அசுரனைக் கொன்றொழித்தார்.


அந்த நரகாசுரன் தான் இறக்கும் தறுவாயில் ஸ்ரீமகாவிஷ்ணு மூர்த்தியிடம் பிரபுவே! நான் பொல்லாத அரக்கன். எந்தவித இரக்கமுமின்றி எல்லோருக்கும் தீங்கிழைத்தேன். ஆகவே நான் இறந்த இந்த நாளை அனைவரும் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்று வரங்கேட்டானாம்.

ஸ்ரீ மகாவிஷ்ணுமூர்த்தியும் அரக்கனுக்கு அருள் புரிந்து இரக்கங்காட்டி, அப்படியே ஆகட்டும் என்று வரமீந்தருளினாராம். அந்த அசுரன் இறந்த நாளே இந்தத் தீபாவளி. ஆதலால் தமிழ் மக்கள் அனைவரும் இன்றைய இனிய நன்னாளில் உற்றார் உறவினர்களுடன் சந்தோஷமாகக் கொண்டாடி இன்புற்றிருப்பர்.

அத்துடன் இந்த இன்பந்தரும் இனிய தீபாவளி நன்னாளில் ஆலய தரிசனம் செய்து இயன்றவரை தானதர்மங்களும் செய்து, அடியார் ஒருவருக்கு அறுசுவை உணவு கொடுத்து உபசரிப்பதும் நிகழும். ஆதலால் இன்றையநாள் வரை பட்ட துன்பங்களும், துயரங்களும் விலகி இன்பவாழ்வில் மகிழ்ந்திருக்க எல்லாம் வல்ல காத்தற் கடவுள் ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தி அருள் புரிவாராக.

கலாபூஷணம்
தெய்வத் தமிழ்ச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்

## திருமகளே வருக



தீப ஒளியினிலே
திசையெங்கும் விளங்கிட
பாவ வினைகளெல்லாம்
கட்டவிழ்ந்தோடிட
நாத ஒலியெங்கும்
மங்களம் இசைத்திட
ஏது பேதங்களென
யாவரும் கூடிட
யாதும் குறைவின்றி
யாவரும் பெற்றிட
பூத்தூவி உன்னை
வரவேற்று நிற்கின்றோம்
தீபத்திருமகளே நீ வருக!
தீமைகள் அகன்றிடவே நீ வருக!

தி.துஷ்யந்தி - நாச்சிமார் கோவிலடி

# தீபாவளி சிறப்பு மலர் - 2013


நிறைந்த ஒளிமயமான வாழ்வினைப் பெற்றிட வாழ்த்துகிறோம்

பட்டுச் சே லைகளின் சோலை வனம்

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**

(இராஜபுரம்)

இல. 105 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். - தொ.பே: 021 222 6953

என்றும் இன்பம் பொங்கிட இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**PTK BAKERS CAFETERID**

(C/1969)

(C/1968)

முல்லை வீதி,
புதுக்குடியிருப்பு
(பொன்னாச்சி பதிப்பகம் அருகாமை)

வாடிக்கையாளர் அனைவருக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

உங்கள் குடும்பத்திலுள்ள
அனைவருக்குமான நவநாகரி
ஆடைத் தெரிவுகளுக்கு
நாடுங்கள்...

**ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ**

இல. 13, 14
பெரியகடை, வீதி
யாழ்ப்பாணம்.

(C/3151)

தித்திக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்

**இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்**

சைக்கிள்,
சைக்கிள் உதிரிப்பாகங்கள்,
இலத்திரனியல் பொருட்கள்,
மற்றும்
கட்டப் பொருட்களையும்
மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

(C/3157)

**E.S.P. NAGARATNAM& CO.**

Distributor for American Mineral Water

587. K.K.S. Road, Jaffna. T.P: 021 221 7277

தீபங்கள் பேசும் தீபத்திருநாள் வாழ்த்துக்கள்

L

**கிருபா லேணர்ஸ்**

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதி பயிற்சிப் பாடசாலை

* குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழாங்கப்படும்.
* வான், முச்சக்கரவண்டி, உழவு இயந்திரம் (ரக்டர்) அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப் பத்திரம் பெற முடியும்.
* கனரக வாகன (AD) சாரதி அனுமதிப் பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.
* எழுத, வாசிக்க தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைபெறும்.

226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 4923200, 0777 225292

(C/3156)

கிளைகள்

சாவகச்சேரி 021 4923202 → கிளிநொச்சி 021 228 5505 → விசுவமடு 021 320 1515

நெல்லியடி 021 3006550 → சுன்னாகம் 021 224 2022 → பருத்தித்துறை 021 4923201

* யாழ். நகரில் முதல்முறையாக கிருபா லேணர்ஸ் வழங்கும் இரவு நேர சாரதிப் பயிற்சிநெறி.
* பெண்களுக்கு நவீன காரில் பயிற்சி வழங்கப்படும்.

# தீபாவளி சிறப்பு மலர் – 2013


வாடிக்கையாளர் அனைவருக்கும் தீபத்திருநாள் வாழ்த்துக்கள்

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**

யாழ். நகரில்
மக்கள் போற்றும்
மகத்தான
ஜவுளிகளின்
சாம்ராஜ்ஜியம்

இல.41, பெரியகடை, யாழ்ப்பாணம்

(C/3149)

**பிரவீணா ஹாட்வெயார்**

சிமெந்து, வன்பொருள்,
எலெக்ட்ரிகல்ஸ், அலுமினியம்,
கண்ணாடி, பிளைவூட், பெயின்ட்
மற்றும் இதர பொது வியாபாரிகள்

தொ.பே: 021 222 4901

198, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

(C/3146)

தித்திக்கும் தீபத்திருநாள் வாழ்த்துக்கள்

**M.D.M Textiles**

புதிய சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்

(C/3147)

இன்றுபோல் என்றும் வாழ்வில் ஒளி நிறைந்திட வாழ்த்துகின்றோம்

**யாழ். அகி ஐஸ்கிறீம்**

திருமணம்; பிறந்தநாள்; பூப்புனித நீராட்டு விழா
மற்றும் அனைத்து மங்களகரமான நிகழ்வுகளுக்கும்
ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

கனகபுரம் வீதி, கிளிநொச்சி
021 791 7585
0778784789

(C/1966)

இனித்திடும் இனிய நல்வாழ்த்துக்கள்

**Pillaiyar Fancy House**

அழகுசாதனப் பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்தையும் மலிவாகவும் தரமாகவும் தீபாவளியினை ஒட்டி
சிறப்பு விலைக்கழிவுடனும் பெற்றுக்கொள்ளலாம்.

பரந்தன் வீதி,
ஏ-35 வீதி, விசுவமடு.
தொ.பே: 0775757142

(C/1967)

தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**FASHION HOUSE**

No. 203(65), K.K.S. Road,
Jaffna.
T.P : 021 222 8713
Fax : 021 222 3034

(C/3150)

**நண்பர்கள் விருந்தகம்**
**FRIENDS INN**
வரவேற்பு மண்டபமும் தங்குமிடமும்
Reception Hall & Rest House

- மங்களகரமான நிகழ்வுகள் நடத்தக்கூடிய குளிரூட்டப்பட்ட மண்டபம்.
- கலை கலாச்சார நிகழ்வுகளுக்கேற்ற மேடை அமைப்பு.
- கூட்டங்கள் மற்றும் பயிற்சி வகுப்புக்கள் நடத்தக்கூடிய ஒலி, ஒளி அமைப்பு.
- குளிரூட்டப்பட்ட விருந்தினர் தங்குமிட வசதிகள்.
- தனியாக அமைக்கப்பட்ட உணவு மண்டபம்.
- ஒரே நேரத்தில் பல ஊர்திகள் நிறுத்தப்படக்கூடிய தரிப்பிடம்.

(C/1968)

தீபாவளி நல் வாழ்த்துக்கள்

No-18, 4th Cross Street,
Kanagapuram,
Kilinochchi.

இல-18, 4ம் குறுக்குத்தெரு,
கனகபுரம்,
கிளிநொச்சி.

மேலதிக விபரங்களிற்கு
:- 0773999210
kilifriendsinn@gmail.com



# தீபாவளி சிற


இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



சிறிராம் ஜுவல்லர்ஸ்

நவநாகரிகத்திற்கேற்ற
தங்க நகைகள் எதுவானாலும்
தர நிர்ணயத்துடன்
பெற்றுக்கொள்ளலாம்.

193, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/3172)

அனைவருக்கும் தீப ஒளி திருநாள் நல்வாழ்த்துக்கள்

Hotel Prawn

ஹோட்டல் பிறவுண்

நாவிற்கினிய சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
உணவுகளை சுவைத்து மகிழ்ந்திட நாடுங்கள்...



மானிப்பாய் சந்தி,
மானிப்பாய்

T.P : 021 225 5430
Email: hotelprown@gmail.com

C/3167

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

கணேசன் சென்ரர்

புடவை, அழகுசாதனப் பொருட்கள்
விற்பனையாளர்

தொ.பே: 024 222 1508

கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.

C/3154

தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

இளவரசி

சேலைச் சோலை

பட்டுப்புடவைகள் பான்சி சாறிகள்,
பட்டு வேட்டிகள்,
சிறுவர், சிறுமியர்
மனங்கவர் ஆடைகள்,
ஆண்கள், பெண்களுக்கான
றெடிமேட் ஆடைகளினை
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். - 021 222 2503

மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

C/3171

தங்க நகை உலகின்
மங்கா புகழுடன் மின்றும்
திகழ்ந்திடும்

சாரங்கா
நகை மாடம்

மங்கையர் மனம் கவரும்
புதிய வடிவமைப்புகளுக்கு
என்றும் சாரங்கா

157/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6972
Fax : 021 222 8869

(C/3148)

தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

நிந்துஜன்
ஹோட்டல்

17 பொன்னாலை வீதி
மானிப்பாய்.

C/3169

P.V.M குருக்கள்

தீபங்கள் அடுக்கி எங்கள்
பாவங்கள் கரைந்திட கண்ணன்
கீதங்கள் பாடியே நாமும்
பாதங்கள் பணிந்திடுவோம்

வீட்டுச் சாந்திகள், அந்தியெட்டி,
மரணச்சடங்கு செய்து தரப்படும்

சிவஸ்ரீ P.V.M குருக்கள்
(மானிப்பாய் ஐயா)
இலங்கை வங்கி அருகாமை
மானிப்பாய்.

TP: 021 492 5125 021 3210867
021 225 5330 077 711 1482

C/3165

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

அல்டின் பான்சி ஹவுஸ்



அழகுசாதனப்
பொருட்களின்
அரங்கம்

யாழ். வீதி,
மானிப்பாய்.

TP: 077 6079039

C/3159

# ப்பு மலர் - ௨0௧௩

## புதிய தீபாவளி

வாழ்த்தும்போது வாழ்வை வாழ்த்துவோம் - இனிப்பு
வழங்கும்போது நட்பை வழங்குவோம்
வெடிக்கும்பேது வெறுப்பை வெடிப்போம் - இன்று
ஒருநாளேனும் ஒழுங்காய் குளிப்போம்.
தெய்வங்கள் என்றும் காத்திருக்கும் சிலைகளாக
மனிதன்தான் கண்ணிமைக்கும் முன் மறைந்து போகிறான்
ஏழையின் வயிறும் கோயில் உண்டியல்தான்
புண்ணியம் சேர்ப்பதில்

பகிர்வோம்.
பதார்த்தம் பகிர்வோம்,
பண்டிகையைப் பகிர்வோம்.

கண்களை மூடிக்கொண்டு இருட்டென்கிறோமாயின்
கண்களில் விளக்கேற்றுவோம் - குறைந்தபட்சம்
கண்களை திறப்போம்.

[illegible]ற்றில் பொருட்டென்றில்லாமல்
மிதக்கும் தூசிபோல
இயற்கையில் நாம் என உணர்வோம்

அகந்தை எனும் அரக்கனை அழிப்போம்,
அன்பை மட்டுமே விதைப்போம்.

பண்டிகைகள் *Fun* டிகைகளாக
அந்த *Sun* டி.வியை அணைப்போம் -அன்பில்
குடும்பம் நண்பர்களை இணைப்போம்
அரவணைப்போம்.



வாடிக்கையாளர் அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்
AMASA TYRE WORKS
அமாசா ரயர் வேக்ஸ்
C/3163
T.P: 077 5239376
021 4923979
உரிமையாளர் K.சந்திரன்,
யாழ். வீதி,
மானிப்பாய்.

அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்
ரானியா ரெக்ஸ்
C/3162
உரிமையாளர்:
மகேந்திரராஜா
மத்திய சந்தை.
மானிப்பாய்.

ராஜ் மியூசிக் பார்க்
116 F. கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
(மாஸ்டரின் பெற்றோல் செற்
அருகாமை) 0770774300

இனிய தீபத்திருநாள் நல் வாழ்த்துக்கள்
சகலவிதமான
துவிச்சக்கரவண்டி திருத்துனர்
C/3168
இளையாவி சுப்பிரமணியம்
ஆஸ்பத்திரி முன்பாக
பொன்னாலை வீதி
மானிப்பாய்
0775753816

ஜீன் வெல்டிங் வேக்ஸ்
ஆட்டோ ரிங்கரிங் ஒட வெல்டிங்
(காஸ் எலக்றிக்கல் அலுமினியம் பித்தளை
சீனசட்டி ஈயம் அனைத்து வகையான
வேலைகளும் ஒட்டிக்கொடுக்கப்படும்
உரிமையாளர்
பாலச்சந்திரன்-kobi
பிரதான வீதி
மானிப்பாய்
C/3161
T.P: 0773104869

தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
Ranjaens Hardware
சகலவிதமான
வாகன உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ள
Jaffna Road
Manipay
021 225 5821

# தீபாவளி சிறப்பு மலர் - 2013


தீபத்திருநாளில் ஆரோக்கிய வாழ்வு பெற வாழ்த்துகிறோம்

இதுவரையிலும் கோவில் வீதி, சட்டநாதர் கோவில் வீதிச் சந்தியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது புதிய முகவரியில் புதுப்பொலிவுடன் இயங்கி வருகின்றது.

021 222 0109
077 248 9418




(C/3158)

767/2 பீச் றோட், பாஷையூர்,
யாழ்ப்பாணம்.
(Holy Cross Hospital அருகாமை)

A/C, Non A/C Rooms with T.V.
Jaffna Style Foods
Chines Foods...



தீபத்திருநாளில் ஆரோக்கிய வாழ்வு பெற வாழ்த்துகிறோம்.

V.S.P
Special Lunch Oil



சுகாதார முறையில் உணவிற்கும்
வைத்தியத்திற்கும்
விஷேடமாக தயாரிக்கப்பட்டது

உங்கள் குடும்பம் ஆரோக்கியமான
மகிழ்ச்சியான சுக வாழ்வை பெற
V.S.P நல்லெண்ணெய்யை பாவியுங்கள்

பரிமளா ஸ்ரோர்ஸ்
26 A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4135
021 222 9165

(C/3155)



# தீபாவளி நல்வாழ்த்துக்கள்



எமது சங்கத்தின் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கும், சங்கத்திற்கு பலவழிகளிலும் ஆலோசனைகளையும் உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்கிய அனைவருக்கும் எமது மனம் கனிந்த தீபாவளி நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி.

(C/1968)

தலைவர், பணிப்பாளர்கள்
பொதுமுகாமையாளர்
அங்கத்தவர்கள்
பணியாளர்கள்
கிளிநொச்சி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
ஏ9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி

தொலைபேசி இல
0217901728-0214924018

# தீபாவளி சிறப்பு மலர் – 2013

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## சிவா கபே & கூல்பார்

சிற்றுண்டி வகை, காலை உணவு
மதியஉணவு, குளிர்பானங்கள்

375, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(C/3179)

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

(C/3160)

## டிலக்சன் மீள் முறுக்குனர்

உரிமையாளர் எம்.ரஞ்சன்

சுதுமலை சந்தி,
மானிப்பாய்

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

## ரகு படமாடம்

வைத்தியசாலை முன்பாக

ரகு ஸ்ருடியோ,
பிரதான வீதி,
மானிப்பாய்.
0779033666

(C/3166)

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## மாதங்கி கூல்பார்

காலை, மதியம், மாலை உணவுகள் சிற்றுண்டி வகைகள் மற்றும்
உடலிற்கு இனிமையான குளிர்பானங்கள்

(C/3178)

பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## கதிரவன் இரும்பகம்

ஹாட்வெயார் பொருட்கள்
கட்டடப் பொருட்கள், பெயின்ற் வகைகள்

021 227 0065 (C/3177) டச்சுவீதி, சாவகச்சேரி

எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் இதயம் நிறைந்த தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்–கிளிநொச்சி.

## மெகா கோப்சிற்றி

குறைந்த விலையில் தரமான
பொருட்களை
ஒரே இடத்தில் விரைவாக
பெற்றுக்கொள்ள மெகா
கோப்சிற்றி

கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

- பொதி செய்யப்பட்ட உணவுப்பொருட்கள்
- பாடசாலை காகிதாதிகள், உபகரணங்கள்
- சிறுவர்களுக்கான விளையாட்டுப்பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- பால்மா வகைகள்
- மரக்கறி வகைகள்
- இறைச்சி வகைகள்
- இலகு கடன் சேவை வசதி (நிபந்தனைக்குட்பட்டது)
- வீட்டில் இருந்தவாறே பொருட்களை கொள்வனவு செய்யும் வசதி

(C/1970)

# தீபாவளி சிறப்பு மலர் – 2013

## தித்திக்கும் தீபாவளியே

வெடிகளைக் கொளுத்தி
கையால் பொத்திக்கொண்டிருந்தவள்,
நான் நெருங்கியதும்
பட்டாசுக்கு பயந்தவளைப் போல
என் பின்னே ஒளிகிறாய்.
உன் பயத்தை
நான் ரசிப்பேனென நினைத்து...

அட... நான் ரசிப்பது உன் நடிப்பை!



ஒளி கண்டகளும்
இருள் அரக்கன்
போல்
உள்ளங்கள்
கொண்ட
ஆணவமும்
அகந்தையும் அகல
ஞானமும்
கருணையும்
ஒளிவீச....
அனைவருக்கும்
தீபத் திருநாளாம்
தீபாவளி
வாழ்த்துக்கள்...!

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

சுவை உலகில் கால் பதித்து ரசித்து சுவைத்திட நாடுங்கள்

**லிங்கம் கிறீம் ஹவுஸ்**

எல்லோரும் விரும்பிச் சுவைத்து
மகிழ்வது லிங்கம் ஐஸ்கிறீம்

(C/3181)

இல. 119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

**சுரேஸ் மோட்டோர்ஸ் & எஞ்சினியர்ஸ்**

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறது.

சகலவிதமான மோட்டார் சைக்கிள்கள்

உதிரிப்பாகங்கள்

சகல வாகனங்களுக்குமான பற்றறிகள்

என்பவற்றின் விற்பனையாளரும்
சகல மோட்டார்
சைக்கிள் சுத்திகரிப்பாளரும் (சேவிஸ்)

முழு சுத்திகரிப்புக்கான கட்டணம்
3000/= மட்டுமே

(C/3180)

0777064110

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**அம்பாள் மரக்காலை**

உங்கள் வீட்டிற்குத் தேவையான
நிலைகள், யன்னல்கள், என்பவற்றைத்
தரமானதாக மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

(C/3182)

261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்மன் கோவிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**THEVANSON**

அனைத்து வகையான
எலக்ரோனிக்ஸ் பொருட்கள்
PVC பைப்ஸ்
பெயின்ற் வகைகள்
Power Tools

(C/3183)

0773912742
0718474688

57, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

# திடீரென வெடித்தது மின்மாற்றி பரபரப்படைந்தனர் மக்கள்

இரவு வேளையில் மின் மாற்றி பாரிய சத்தத்துடன் வெடித்தமையால் மல்லாகம் கல்லாரை வீரபத்திரர் கோவிலடி பகுதியில் உள்ள மக்கள் பெரும் பதற்றமான நிலமைக்கு உள்ளா கிய சம்பவம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது .

இரவு பத்து மணியளவில் மின்மாற்றி வெடித்ததைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டது .

சுன்னாகம் மின்சார சபைக்கு அறிவித்ததைத் தொடர்ந்து உடனடியாக இரவுடன் இரவாக மின்மாற்றி சீர் செய்யப்பட்டு மின்விநியோகம் உடன் வழங்கப்பட்டது .

இதே வேளை மின்மாற்றியில் சில விசமிகள் திட்டமிட்டமுறையில் செயல் பட்டு பழுதடைய செய்ய முற்பட்டமையால் இந்தச் சம்பவம் நடந்து இருக்கலாம் எனவும் குறிப்பிட்ட மின்மாற்றிக்கு அருகாமையில் இருந்து குறடுகள் மற்றும் வயர்கள் உட்பட வேறு பொருட்களும் திருத்துவதற்கு வந்த மின்சார சபை ஊழியர்களினால் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவிலும் ஆரம்பமானது அதிவிரைவு தபால் சேவை



துரிதமாக கடிதங்களை கிடைக்கச் செய்வதற்காக அதிவிரைவு தபால் சேவை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வவுனியாவிலும் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் உத்தியோக பூர்வமாக அதி விரைவு தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் பிரதேச அஞ்சல் அதிபதி நாயகம் என்.ரட்ணசிங்கம் கருத்து தெரிவிக்கையில்,

எமது திணைக்களத்தின் மற்றுமோர் முயற்சியாக தபால்களை உடனடியாக கிடைக்கச் செய்யக் கூடியதாக எமது அமைச்சரின் நடவடிக்கை காரணமாக அதிவிரைவு தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எமக்கு இரண்டு வாகனங்கள் இந் நடவடிக்கைக்காக வழங்கப்பட்டுள்ளது. அதில் ஒன்று யாழ்ப்பாணம் செல்லும். இது வடமாகாண தபால்களை விநியோகிக்கும். மற்றையது தம்புள்ளைக்கு சென்று தபால்களை ஒப்படைக்கும். தென் பகுதிக்குரிய தபால்களை தம்புள்ளை பகுதியில் வைத்து சேகரிப்பதனால் அங்கு சென்று எமது வாகனம் விநியோகிக்கும் என்றார்.

இதன் மூலம் தபால் விநியோகத்தில் ஏற்படும் தடங்கல்களை குறைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

ஆரம்பிக்கப்பட்ட இந்த சேவையில் பிரதேச அஞ்சல் அதிபதி நாயகம் என்.ரட்ணசிங்கம், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எம.ஜி.அல்ஹா சல்ஹாது மற்றும் வவுனியா அஞ்சல் திணைகள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# வவுனியா பிரதேச செயலகத்தில் முதியோர்கள் கௌரவிப்பு

வவுனியா பிரதேச செயலக பிரிவில் பல்வேறு துறைகளிலும் சேவையாற்றிய முதியோர்கள் கடந்த சனிக்கிழமை வவுனியா பிரதேச செயலகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

"வவுனியாவின் வளர்ச்சிக்கு பங்களாலான ஒத்தாசைகளை வழங்கிய முதியோர்கள் சமூகத்தின் பார்வையில் ஒதுக்கப்பட முடியாதவர்கள்" எனும் கருத்துக்கிணங்க கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலாளர் க.உதயராசா தலைமையில் பூவரசன்குளம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முதியோரை மகிழ்ச்சிப்படுத்தும் விளையாட்டுக்களும் பல்வேறு நிழ்வுகளும் இடம்பெற்றிருந்ததுடன் முதியவர்கள் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டனர்.



# இன்றைய ஆட்டங்கள்

(மானிப்பாய்)

தீபாவளியை முன்னிட்டு கோப்பாய் கண்ணகை அம்மன் கோவிலடி சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் தடகள விளையாட்டு விழா கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

காலை 6 மணிக்கு வீதியோட்டம் இடம்பெறவுள்ள அதேவேளை, மாலையில் ஏனைய தடகள நிகழ்வுகள், வினோத உடைப் போட்டி, உட்பட பல போட்டிகள் இடம்பெறவுள்ளதாகவும் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

கா.றாஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண நன்நடத்தை சிறுவர் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் தி.விஸ்வரூபன் கலந்துகொள்ளவுள்ளார். (93)

□ □ □

(மானிப்பாய்)

நந்தாவில் அம்மன் விளையாட்டுக் கழகம் தீபாவளி தினத்தில் அழைக்கப்பட்ட 6 அணிகள் பங்குபற்றும் கிறிக்கட் சுற்றுப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.

காலை முதல் நந்தாவில் அம்மன் விளையாட்டு கழக மைதானத்தில் அணிக்கு 11 பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி 8 ஓவர்கள் கொண்டதாக இடம்பெற வுள்ளது.

இப் போட்டிகளில் நந்தாவில், சிந்மயபாரதி, ஆர்.பி,. குமரகோட்டம், கலையொளி, கே.எஸ் ஆகிய அணிகள் பங்குபற்றவுள்ளன.

போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (48)

□ □ □

(சுன்னாகம்)

ஸ்கந்தாவின் நட்சத்திரங்களின் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் 1.30 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

தீபாவளித் திருநாளை முன்னிட்டு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற ஸ்கந்தாவின் நட்சத்திரங்களின் கால்பந்தாட்டப் போட்டி நீண்ட இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகள் மோதவுள்ளன.

இப்போட்டியில் வெற்றிபெற்றும் அணிக்கு நட்சத்திரங்களின் வெற்றிக்கிண்ணம் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## வாரம் ஒரு காரம்

# செயற்படத் தவறும் மாகாண சபையால் அதிகரித்து வருகின்றன துர்ச்சம்பவங்கள்

அநாதைக் குழந்தைக்கு அநீதி நடக்கும் போது அதனைத் தட்டிக் கேட்கவும் ஆளிராது, வெட்டிப் பேசவும் குரலிராது. வடபுலத்து மக்களின் வாழ்வும் இப்படியாகி விட்டது. இதனால் தான் கொலைகள், கொள்ளைகள் மலிந்த பிரதேசமாக இது மாறிவருகின்றது. இது தொடர்பாக சிந்திப்பது இன்றைய கட்டாய தேவைகளில் ஒன்றாக உள்ளது.

போர் முடிவிற்கு வந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன. இதன் பின்னணியில் தமிழ் மக்கள் புதிய முகங்களிற்கு ஒருமித்து அரசியலில் இடங் கொடுத்த சம்பவங்களாலும், அரச வெறுப்பின் உச்சக்கட்ட வெளிப்பாடாலும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாரிய வெற்றியைப் பெற்று அதிகாரங்கள் பற்றிப் பேசியும் பேசாமலும் ஆட்சி அமைத்துவருகின்றது.

அதேவேளை வடமாகாண எதிர்க்கட்சிகள் உட்பட இடதுசாரிக்கட்சிகள் செயற்பட மறுக்கும் மாகாணசபை தீங்கான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இன்றும் கூறிவருகின்றனர். இதன் விளைவுகள் தானோ இந்த கொலை, கொள்ளை, பலாத்காரச் சம்பவங்கள்... இன்று தொடர்ச்சியாக அரங்கேறிவருகின்றது!

அவசியமற்ற பல விடயங்களைப் பற்றிப் பேசிவருகின்றோம். ஆனால் ஆழமான பிரச்சினை யொன்று உருவெடுத்து வருகின்றது என்பதை நாம் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றோம். திடீரென ஏன் தற்போது இந்தச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன? இச்சம்பவங்களின் குற்றவாளிகள் எவராவது கண்டறியப்பட்டனரா? இதன் பின்னணியென்ன என்பது ஒருபுறமிருக்க, மக்கள் இது தொடர்பாக யாரிடம் முறையிடுவது?

மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்தியில் (அண்மையில் பாதுகாப்புச் செயலாளர்) இதற்கெல்லாம் வடமாகாண முதல்வர் என்கின்ற ரீதியில் விக்னேஸ்வரனே பதில் சொல்லவேண்டுமென கூறியுள்ளார். அதேவேளை பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைகளிற்கு இல்லாத போது இது தொடர்பாக எவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியும் என முதலமைச்சர் கூறுகின்றார்.

இப்படியே தொடர்ந்தால் இதற்கான முடிவென்ன?... எமக்கு நடக்கும் இன்னல்களை எம்மால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் தான் தீர்த்துவைக்க வேண்டும் என மக்கள் கோருவதும் நியாயமானது. மிகப்பெரிய வெற்றிக்குப்பின் நிம்மதியான நிலையான ஓர் தீர்வு கிடைக்குமென்ற எதிர்பார்ப்பு தலை கீழாக மாறியுள்ளது.

இந்த அரசியல் சந்தர்ப்பத்தைத்தான் குற்றவாளிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துகின்றார்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டுவிட்டது. சுயாட்சி வழங்கப்பட்டு விட்டது. இதன்பின் நடப்பதற்கு பாதுகாப்பு அமைச்சுப் பதில் சொல்லமுடியாது என்று தப்பித்துக் கொள்ளலாம். ஏனெனில் மாகாணத்திற்கான சட்டம், ஒழுங்கு மற்றும் பொலிஸ் அதிகாரங்களிற்கு தனியான ஓர் அமைச்சும் உருவாக்கப்பட்டு விட்டது. இது அதிகாரமிட முடியாவிட்டாலும் காவல்துறைக்கு அறிவுறுத்திச் செயற்பட்டு சட்டம் ஒழுங்கிற்குப் பங்காற்ற முடியும் என்பது பாதுகாப்புச் செயலாளரின் வாதம். இவையெல்லாம் இடியப்பச்சிக்கல் போல் அரசியலில் இன்னல்களை விளைவித்து வருகின்றது.

எது எப்படி இருப்பினும் இது தொடர்பாக மக்களிற்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு மாகாண சபைக்கே உள்ளது. ஏனெனில் பிரதேச ரீதியான மக்களின் அரசியல் பிரதிநிதிகள் இவர்களே.

அது ஒருபுறமிருக்க, காலம் தாழ்த்தி நடைமுறைப்படுத்த வேண்டிய பல பிரச்சினைகளை சுட்டிக்காட்டி குட்டையை முதலே குழப்பிவிட்டால் கறிக்கு மீன் கிடையாது. உதாரணமாக மாவீரர்களை மகிமைப்படுத்த வேண்டியதும், துயிலும் இல்லங்களை பராமரிக்க வேண்டியதும் தேவைதான். ஆனால் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செயற்பட முடியாது. அது விசயத்தை வெல்வதற்குப் பதில் குழப்பிக் கெடுப்பதாகவே முடியும்.

இந்த இடத்தில் இது தொடர்பாக பொறுப்புடன் சிந்திக்காது அடுத்த நாடாளுமன்றத் தேர்தலிற்காக பேசப்படும் வீர வசனங்கள் மாகாணசபையைக் குழப்பி முடக்குவதாகி விடக்கூடாது என்பதை தமிழ் கூட்டமைப்பு அரசியல் வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது நாடாளுமன்றத்தேர்தல் தொடர்பாகவும் பழமையான கூட்டமைப்புத் தலைமைகளிற்கு பெரும் பீதி கிளம்பியுள்ளது. ஏனெனில் மக்கள் புதிய முகங்களையும் புதிய சிந்தனைகளையும் உள்வாங்கிவிட்டார்கள். ஏமாற்று அரசியல் இனிவரும் காலத்தில் அரங்கேறாது. ஒன்றை இவர்கள் தெளிவாகப் புரியவேண்டும். அரசியலில் நிலைப்பதைவிட அரசியலில் சாதிப்பதுதான் தற்போது எதிர்கால கௌரவத்தை உங்களுக்குத் தேடித்தரும். ஏனெனில் மக்கள் மனங்கள் மாறிவிட்டன.

–வெண்கட்டியன்.

# முழங்காவில் கிராமத்தில் ஆரம்பப்பாடசாலை திறப்பு



ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்ட "சோஆ" நிறுவனத்தினால் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் கிராமத்தில் அமைக்கப்பட்ட ஆரம்பப்பாடசாலை நேற்று முன்தினம் மதியம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய 4 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் குறித்த ஆரம்ப பாடசாலையினை "சோஆ" நிறுவனத்தினர் நிர்மாணித்துள்ளனர் .

இந்த நிலையில் நேற்று முன்தினம் மதியம் 1 மணியளவில் குறித்த ஆரம்ப பாடசாலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டது.

இதன் போது ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவர் டேவிற் டாலி, ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாட்டுப் பிரிவுக்கான தலைவர் வில்லி வடன் பேக், நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்திப் பிரிவு முகாமையாளர் லெஸ்லி ஜேசுராஜன், "சோஆ" நிறுவனத்தின் இலங்கைக்கான நன்கொடைப் பிரிவின் தலைவி றெபேக்கா ஓவன் மன்னார் மாவட்ட "சோஆ" நிறுவனத்தின் முகாமையாளர் ஜோச் அந்தோனிப்பிள்ளை பூநகரி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ் . தர்மரத்தினம், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் தொழில் நுட்ப அலுவலகர் வெற்றிவேல் வெற்குமாரர் பாடசாலை அதிபர் திருமதி பரதன் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த ஆரம்ப பாடசாலையினை திறந்துவைத்தனர் .

# பாராட்டு விழாவும் மலர் வெளியீடும்

நாடகக் கலைஞர் கலாபூஷணம் மா.அனந்தராசனுக்கான பாராட்டும் அனந்தம் மலர் வெளியீடும் நாளை பி.ப 2.30 மணிக்கு ஓய்வுபெற்ற அதிபர் செ. சதானந்தன் தலைமையில் தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் கலந்து கொள்கிறார். நிகழ்வில் இ.து.குலசிங்கம், பா.இரகுபரன், சி. பசுபதி, வடமாகாண சபை உறுப்பினர்கள் அ.பரஞ்சோதி, வே.சிவயோகன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர். மற்றும் கொற்றை பி. கிருஷ்ணானந்தன், கே.ஆர் டேவிட், கலாநிதி செ. திருநாவுக்கரசு, மா. கிருஷ்ணகாந்தன் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்குவர்.

'அனந்தம்' மலர் வெளியீட்டுரையை வேல்நந்தனும், நயப்புரைகளை பரா.ரதீஸ், ஆ.கந்தையா ஆகியோரும் நிகழ்த்துவர். ஏற்புரையை மலர் இணையாசிரியர் சு.குணேஸ்வரனும் விழா நாயகன் மா.அனந்தராசனும் நிகழ்த்துவர்.

அல்வாயூர் கவிஞர் நாடக மன்றத்தின் ஏற்பாட்டில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளது. (90)

## கந்த சஷ்டி

சாவகச்சேரி சந்திரபுரம் வேம்படி கந்தசுவாமி ஆலய கந்த சஷ்டி உற்சவம் திங்கட் கிழமை ஆரம்பமாகின்றது.

தினமும் மாலை விசேட பூசை இடம்பெறுவதுடன் கந்த சஷ்டி படிப்பும் இடம்பெறும் வெளிக்கிழமை மாலை சூரசங்காரம் இடம்பெற்று சனிக்கிழமை காலையில் விசேட பூசையுடன் சஷ்டி உற்சவம் நிறைவடையும். (இ)

## மின்வலு அதிகரிப்பு உபகரணங்கள் பாதிப்பு

(வரணி)

வரணி வடக்கு பகுதியில் கடந்த திங்கட்கிழமை திடீர் என மின்வலு அதிகரித்ததால் அப்பகுதியில் பாவனையில் இருந்த மின்சார உபகரணங்கள் செயலிழந்தன.மின் பிறப்பாக்கியில் ஏற்பட்ட திடீர் கோளாறே இதற்கு காரணம் என தெரியவருகிறது.

உடனடியாக மின்சார சபைக்கு விடயம் தெரியப்படுத்தி மின் இணைப்பு துண்டிக்கப்படும் வரை கூடிய மின்வலு வந்த வண்ணமிருந்தது. இதனால் மின் பாவனையாளர்கள் பலரது வீட்டு மின் பாவனைப் பொருட்கள் செயலிழந்தமை குறிப்பிடத்தக்கது. (150)

# நல்லொழுக்க தின விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தினவிழா எதிர் வரும் 5ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு பரு. மெதடிஸ்த பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி நல்லொழுக்க நிகழ்வில் பிரதம விருந்தி னராக வடக்குமாகாண கல்வி பண்பாட் டலுவல்கள் விளையாட் டுத்துறை இளைஞன் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ள வுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் . பருத்தித்துறை பிரதேச செயலர் திருமதி த.ஜெயராசா, கரவெட்டி பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் செ. சுபச்செல்வன், கௌரவ விருந்தினர்களாக மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை முதல்வர் திருமதி செல்வமலர் சுந்தரேசன், றகம திட்ட முகாமையாளர் ஐ.லோகநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் மெ.மி.த.க பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனமும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவர்களின் இசையும் கோலாட்டமும். வடமராட்சி இந்து மகளிர் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆகியவற்றின் நாடகங்களும் இடம்பெறும் அத்துடன் இத்தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பேச்சு, கவிதை, கட்டுரை ஆகியவற்றில் மூன்று கோட்டங்களில் இருந்து பங்கு பற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்களும் ஆறுதல் பரிசில்களும் வழங்கி கௌரவிக் கப்படவுள்ளது. (109)

# போக்குவரத்துக்கு உதவாத உடுப்பிட்டி, அல்வாய் வீதி

(கரணவாய்)

உடுப்பிட்டி அல்லாய் வீதி போக்குவரத்துக்கு உதவாத நிலையில் மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் இதனூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

நீண்டகாலமாக எவ்வித புனரமைப்பும் இன்றி குண்டும் குழியுமாக காணப்படும் இவ்வீதியால் நாளாந்தம் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள், வர்த்தகர்கள் எனப் பலர் பயணத்தை மேற்கொள்கின்றனர். இதேவேளை இவ்வீதி சேதமடைந்துள்ளதால் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகிய பாடசாலைகள் அமைந்துள்ள பிள்ளையார் ஆலய பின் வீதியிலும் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இவ்வீதியை புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (சி-18)

## பொன் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன்விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பள்ளிவாசல்கள், வர்த்தக நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் ஆகியவற்றிலிருந்து 2 பிரதிநிதிகளை கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (105)




# புதிய ஆண்டுக்கான நிர்வாகம் தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதில் 2013-2015 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. இந்நிகழ்வு கூட்டுறவு ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றது.

புதிய தலைவராக முருகேசு பரமேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக தர்மலிங்கமும் செயலாளராக வசந்தன் சுமதியும், பொருளாளராக செல்லத்துரை சுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர். சபரிமுத்து சந்தியாப்பிள்ளை, ஈஸ்வரலிங்கம் திவாகர், கணேசநாதன் றகுநாதன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

## முரசின் இன்றைய பலன்



(02.11.2013 சனிக்கிழமை)

விஜய வருஷம் ஐப்பசிமாதம் 16 ஆம் திகதி.
அரச வங்கி விடுமுறை தீபாவளி பண்டிகை
சித்திரை நட்சத்திரம் பி.இ -12.56 வரை
பின்சுவாதி மரணயோகம் சதுர்த்தசி
இராகுகாலம 09.04- 10.34 வரை. சுபநேரம 03.04- 04.34 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** மர்மக்கல்வீச்சினால் பதட்ட நிலையில் இருத்தல், நடைபாதை வியாபாரிகளின் முற்றுகையினால் வர்த்தகம் பாதிக்கப்படுவதினால் விசனம்மடைதல்.

**ரிஷபம்** களவாக மின்சாரம் பெற முயற்சித்ததால் தண்டனை பெறல், நிலுவையில் உள்ள கட்டணச் சிட்டைகளுக்குரிய பணம் செலுத்தாமையால் விநியோகம் நிறுத்தப்படல்.

**மிதுனம்** சகோதரர் மத்தியில் சொத்து சம்பந்தமான பிரச்சினை உருவாதல், சீட்டுக்காசு கேட்கப்போய் களேபரம் உருவாதல்.

**கடகம்** சிறுநீரகக் கோளாறினால் அவதிப்படல், கடன் வாங்கியவரின் சரியான தகவல் அறியாது திக்குமுக்காடல்.

**சிம்மம்** வழக்கின் முடிவு பாதகமாக இருந்ததால் கவலை, வாய்ப்பூட்டு போட்டதால் கருத்தை வெளியிட முடியாது ஆதங்கப்படல்.

**கன்னி** காவல்துறையின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது சென்றதால் கலைத்துப்பிடிக்கப்படல், போட்டிகளில் கலந்து திறமையை வெளிப்படுத்தி பெருமை பெறல்.

**துலாம்** நீண்டகாலம் குழந்தைப் பாக்கியம் இன்மையால் தத்துப்புத்திரரை பெறமுயற்சி எடுத்தல், பெண் பிள்ளைகளுடன் சேட்டை விட்டதால் எச்சரிக்கை செய்யப்படல்.

**விருச்சிகம்** சிரிப்பினை மருந்தாகக் கொண்டதனால் துன்பம் விலகியது, இறால் போட்டு சுறா பிடிக்கும் முயற்சியில் இறங்கியதால் காரிய சித்தி ஏற்படல்.

**தனுசு** எதிர்ப்புக்களையும், சவால்களையும் தாண்டி முன்னேற்றமடைவீர்கள், புதிய கோணத்தில் சிந்தித்து மனதை வருத்திக் கொண்டிருக்கும் சிக்கலின் முடிச்சை அவிழ்த்துவிடுதல்.

**மகரம்** கணவரின் நடத்தையில் சந்தேகமேற்பட்டதால் விவாகரத்து செய்ய முற்படல், மயக்கமருந்து பாவித்து திருட்டு நடாத்தியதால் இழப்புக்கள் ஏற்படல்.

**கும்பம்** நிற்பாட்டியிருந்த வாகனத்துடன் மோதி விபத்து ஏற்படல், உள்ளூரில் வெளியூர் பயணத்தைக் கைவிடல்.

**மீனம்** மாதக்கொடுப்பனவு குறைக்கப்பட்டதால் விசனம், காணாமல் போனவர் உயிருடன் இருக்கின்றார் என்ற தகவல் அறிந்ததால் மகிழ்ச்சி.





கிளிநொச்சியில் நேற்று ஆரம்பமான BEEFY's Big Walk நடைபவனி நிகழ்வில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இயன் பொத்தம் மற்றும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மகேல ஜெயவர்த்தன கிளிநொச்சி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா மற்றும் பலர் பங்குகொண்டனர். நேற்றைய முதல் நாள் நடை பயணம் மாங்குளம் வரை சென்றது.இன்று மாங்குளத்திலிருந்து நடை பயணம் ஆரம்பமாகவுள்ளது.(29)

# முரளி கிண்ண ருவெண்ரி–20 நேற்று கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முரளி நல்லிணக்க ருவெண்ரி-20 தொடர் நேற்று ஐந்து இடங்களில் ஆரம்பமானது.

இரண்டாவது ஆண்டாக இடம்பெற்று வரும் முரளி நல்லிணக்க ருவெண்ரி -20 போட்டி நேற்றுக் காலை 9.00 மணிக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மாங்குளம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆரம்பமானது.

இதில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதல் போட்டியில் கொழும்பு சென். பீற்றர்ஸ் அணியும், யாழ். மாவட்ட கூட்டு பாடசாலை அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். பீற்றர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய யாழ். மாவட்ட கூட்டுப் பாட-சாலை அணி ஜெனக்ஷனின் அதிர டித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். மாவட்ட கூட்டுப் பாடசாலை அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெனக்ஷன் 44 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 57, துவாரகசீலன் 37, கனிஸ்ரன் 17, ஆதித்தன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிமிலன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். பீற்றர்ஸ் அணி ஹசலின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது.

இறுதியில் சென். பீற்றர்ஸ் அணி 14.2 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஹசல் 34 பந்துகளை எதிர்கொண்டு 77, டினோத் 58, ஜனித் 46 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கானமிர்தன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இன்றைய தினம் யாழ். மாவட்ட அணி அநுராதபுரம் மத்திய கல்லூரி அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முதல் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் கூட்டு அணியும், சீனிகம அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிளிநொச்சி மாவட்ட கூட்டு அணி 16 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய சீனிகம அணி 10.5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இன்று கிளிநொச்சி மாவட்ட கூட்டு அணி கண்டி அணியை எதிர்கொள்கின்றது.

இதேவேளை, கிளிநொச்சியில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன்,உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (எஸ்.பி., 29)






கிளிநொச்சியில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வின்போது...

## சச்சின் சாதனையை முறியடிப்பாரா ஹோலி

(மும்பை)

ஒரு நாள் போட்டியில் சச்சினின் சாதனையை முறியடிக்கக்கூடிய அதிக வாய்ப்பு ஹோலிக்கு இருக்கின்றது என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

சாதனைகள் என்பது முறியடிக்கப் படக்கூடியது தான். ஆனால் டெண்டுல்கரின் சில சாதனைகளை அதாவது 200 டெஸ்டில் பங்கேற்றவர், 51 டெஸ்ட் சதம் ஆகியவற்றை யாராலும் முறியடிக்க முடியாது என்பதை நாம் அறிவோம். ஆனால் ஹோலி விளையாடி வரும் விதத்தைப் பார்க்கும் போது, ஒரு நாள் போட்டியில் டெண்டுல்கரின் அதிக சதங்கள் (49 சதம்) சாதனையை முறியடிக்க வாய்ப்புள்ளது.

அதற்கு இன்னும் 32 சதங்கள் தான் ஹோலிக்குத் தேவைப்படுகிறது. நிறைய ஒரு நாள் போட்டிகளில் இந்தியா விளையாடும் போது, ஹோலியால் இந்தச் சாதனையை செய்ய முடியும். இந்த கிரிக்கெட் சீசனில் ஹோலி 20 அல்லது 22 சதங்களை எட்டி விடுவார்

இவ்வளவு திறமை பெற்ற ஹோலி கிடைத்தது இந்திய அணிக்கு அதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும். இவர் வளர்ந்து வந்த இந்தக் காலத்தில் சச்சின், ராவிட், சேவாக், லக்ஸ்மன் போன்ற சிரேஷ்ட வீரர்களுடன் பழகியது, இவரது கிரிக்கெட் அனுபவத்தை அதிகப்படுத்தியது.

இது ஹோலியின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்பதை மறுப்பதற்கு இல்லை. சூழ்நிலை மற்றும் எதிரணியினரை புரிந்து விளையாடுவதால் தான், இவரால் சிறப்பாக விளையாட முடிகிறது. ஏனையவர்களும் இவரைப் பின்பற்றி ஆட முற்படவேண்டும். அது அணிக்கும் நல்லதாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பெங்களூரில் இன்று இறுதி ஒரு நாள்

(பெங்களூர்)

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக் கிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் பெங்களூரில் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இரு அணிகளும் இரு போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளமையால் இறுதி ஆட்டத்தில் வென்று தொடரைக் கைப்பற்றிக் கொள்ள இரு அணிகளும் உச்ச திறனை வெளிப்படுத்தி முனைப்புடன் போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, தொடரைக் கைப்பற்றிக் கொள்ள முழு முயற்சியுடன் செயற்படுவோம் என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் பெய்லி தெரிவித்துள்ளார்.

இதுவரை நடைபெற்ற போட்டிகளின் அனுபவங்களை பெங்களூரில் வெளிப்படுத்தி தொடரைக் கைப்பற்றுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தொடர் பங்களாதேஷ் வசம்

(மிர்பூர்)

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், பங்களாதேஷ் அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. இதன்மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 எனக் கைப்பற்றிக் கொண்டது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டி மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி 49 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தமிம் இக்பால் 58, ரஹ்மான் 25, மோமினுல் ஹக், முஷ்பிகுர் ரஹிம் தலா 31, சோஹாக் காஜி 26, மொகமதுல்லா 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோரி அண்டர்சன், நீஷாம் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 248 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி 46.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கோரி அண்டர்சன் 37, மில்ஸ் 27, நதன் மக்கலம் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சோஹாக் காஜி மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



அடுத்தடுத்து இரண்டு வெற்றியை பெற்ற பங்களாதேஷ் அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 எனக் கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது. மூன்றாவது மற்றும் கடைசி போட்டி நாளை நடைபெறவுள்ளது. சோஹாக் காஜி ஆட்டநாயகன் விருதை வென்றார். இதன்மூலம் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை இரண்டாவது முறையாக பங்களாதேஷ் அணி (2010-11, 2013-14) கைப்பற்றியது.

# பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 190 பேர் குடாநாட்டில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். மற்றும் காங்கேசன் துறை பொலிஸ் பிரிவுகளில் கடந்த வாரம் நீதிமன்றப்பிடி யாணையின் பிரகாரமும் பல்வேறு குற்றச்செயல்களின் நிமிர்த்தமும் 190பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாக காங் கேசன்துறை பொலிஸ் அத்தி யட்சகர் தமயந்த விஜய சிறி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பொலிஸ்நிலை யத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித் தார். அங்கு அவர் மேலும் தக வல் தருகையில் யாழ். பொலிஸ் பிரிவில் அடித்து காயம் ஏற் படுத்தியது தொடர்பில் 33பேரும் பிடியாணையின் மூலமாக 12 பேரும், சட்டவிரோத மின்சாரம் பெற்ற 13பேர், உட்பட 110 பேரும் காங்கேசனதுறை பொலிஸ் பிரிவில் பிடியாணை யின் பிரகாரம் 15 பேரும் சந்தே கத்தின் பேரில் 16 பேருமாக 80 பேரும் இவ்வாறு பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டதாகத் தெரிவித்தார்.

குற்றச்செயல்களுடன் ஒப் பிடுமிடத்து இலங்கையின் அனைத்துப் பகுதிகளையும் விட யாழ்ப்பாணத்தில் குறைவு என்று தெரிவித்த பொலிஸ் அத்தியட் சகர் ஆசியாவிலேயே இலங் கையில் குறைவு அதிலும் யாழ்ப் பாணத்தில் அதிலும் குறைவு என்று தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபரின் வழி காட்டலில் பொதுமக்களுடன் இணைந்து பொலிஸாரும் பணி யாற்றி குற்றச்செயல்களைத் குறைப்பதற்கான செயற்றிட்ட மொன்று வகுக்கப்பட்டிருப்பதா கவும் தெரிவித்ததுடன், மாண வர்கள் மட்டத்தில் பொலிஸார் குறித்து தெரிவிக்கப்படும் கருத் துக்களுக் கேற்ப புரிந்துணர்வை ஏற்படுத்தியும் பொலிஸார் தரப் பில் இருக்கும் தவறுகளைகளை யவும் திட்டமிடப்பட்டிருப்பதா கவும் தெரிவித்தார். (பா)



அகில இலங்கை ரீதியில் ஜோதிடர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் கலாசார அமைச்சர் ரீ.பி.ஏக்க நாயக்கா தலைமையில் ஜோதிர் வித்யாரத்னா விருது பெற்ற ஜோதிடர்களைக் காணலாம். வி.ஏ.சிவராசா தமிழ் ஜோதிடருக்கான விருதைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உழவியந்திரங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு



(மன்னார்)

உழவு இயந்திரங்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மேல் பணித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் விவசாய நடவடிக் கைகளுக்காக கடந்த காலங்களில் அரசாங் கத்தினால் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் தொடர்பிலேயே அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கு மாறும் அவர் பணித்துள்ளார்.

மன்னார் மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய தலைமையில் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை நடைபெற்றது. இதன்போதே மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் இவ்வாறு பணித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் விவசாய நடவடிக்கை களை மேம்படுத்தும் பொருட்டு அரசாங்கத்தினால் சுமார் 100 உழவு இயந்திரங்களும் அதற்கான உதிரிப்பாகங்களும் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள், பொருட்களின் பாவனை மற்றும் பராமரிப்பு தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார். மேலும், விவசாயிகளின் நலன்களை கருத்திற்கொண்டு வழங்கப்பட்ட உழவு இயந் திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் பாவிக்கப் படாமல் இருக்குமானால் அது தவறு எனவும் அவர் கூறினார்.

எனவே, விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட சுமார் 100 உழவு இயந்திரங்களின் பாவனை, அதன் பராமரிப்பு, அதற்கு உரித்தான பொறுப்பாளிகள் தொடர்பில் முழுமையான விபரங் கள் அடங்கிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக் குமாறும் இந்தக் கூட்டத்தில் அவர் கூறினார்.

இது தவிர இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விவ சாயிகளிடமும் உரிய அதிகாரிகளிடமும் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்ட றிந்துகொண்டார்.

மேலும், இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் தங்களது திணைக்களங்களி னால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்றிட்டங்கள் பற்றி மேலதிக அரசாங்க அதிபரிடம் தெளிவுபடுத் தினர.

விவசாயிகளின் பிரச்சினைகளை கவனத்திற் கொண்ட மேலதிக அரசாங்க அதிபர், விவசாயிக ளின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

# துணுக்காய் கல்வி வலயத்தில் சர்வதேச கை கழுவுதல் தினம்



துணுக்காய் வலயக்கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த 15ஆம் திகதி காலை 9.00 மணிக்கு முல்லை.கரிப்பட்டமுறிப்பு அ.த.க. பாடசாலையில் வலயக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் திருமதி மாலினி வெனிற்றன் தலைமையில் சர்வதேச கைகழுவுதல் தினம் நடை பெற்றது. இந் நிகழ்விற்கு வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மாலை அணிவித்து விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு, தேசியக் கொடி, வலயக் கொடி ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமானது.

தலைவரால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சி.ஜெயபாலன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி) அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் உரை இடம்பெற்றது. மாணவர்கள் கைகழுவும் முறை, கலை நிகழ்வுகள் என்பன சிறப்பாக நடை பெற்றன. இத்துடன் நிகழ்வுகள் முற்பகல் 11.30 மணிக்கு நிறைவு பெற்றது.

# உலகநாடுகள் இலங்கையுடன் இணைந்து செயற்பட வேண்டும்

## அழைப்பு விடுக்கிறது ஆஸி.

30 ஆண்டு யுத்தத்தின் பின்னர் இலங்கையில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அதில் உலக நாடுகள் இலங்கையுடன் இணைந்து செயற் பட வேண்டுமென அவுஸ்ரே லிய வெளிவிவகார அமைச்சர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள் ளார்.

தாமும், பிரதமர் டோனி அப் போடும் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவித்துள் ளதுடன் நீண்ட கால அடிப்படை யில் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவ சியமானது என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

இதணைவிட தற்போது இலங்கை எதிர்நோக்கி வரும் சவால்க ளுக்கு தீர்வு வழங்க பிராந்திய வலய நாடுகளும் சர்வ தேச அமைப்புக்களும் ஏனைய உலக நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசிய மானது என அவர் தெரிவித்துள்ளார்.

# சுபீட்சமான நாடுகளில் 60ஆவது இடத்தில் இலங்கை

உலகின் சுபீட்சமான நாடுகளின் வரிசையில் இலங்கை 60ஆவது இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா 106ஆவது இடத்தையும், நேபாளம் 102ஆவது இடத்தையும், பங்களாதேஷ 103ஆவது இடத்தையும் வகிக்கின்றது.

சுபீட்ச சுட்டெண் தொடர்பிலான கணிப்பீடு 142 நாடுகளில் நடத்தப்பட்டுள்ளது.

லண்டனை மையமாகக் கொண்டு இயங்கி வரும் லகடான் நிறுவனம் இந்த ஆய்வினை நடத்தியுள்ளது.

தலா தேசிய வருமானம், மொத்த தேசிய சேமிப்பு, தொழில்வாய்ப்பு, உணவு இருப்பிட வசதி போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் சுபீட்சம் தொடர்பிலான கணிப்பீடு மேற்கொள்ளப் படுகின்றது.

உலகின் சுபீட்சமான நாடுகளின் வரிசையில் நோர்வே முதலாம் இடத்தையும், சுவிட்சர்லாந்து இரண்டாம் இடத்தையும், கனடா மூன்றாம் இடத் தையும் வகிக்கின்றன

# சிறுவர் துஷ்பிரயோகம்

# சமுர்த்தி முகாமையாளர் பணி இடைநிறுத்தம்

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ள சமுர்த்தி முகாமையாளர் இடை நிறுத்தப் பட்டுள்ளார்.

செங்கலடி பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி முகாமை யாளராக கடமையாற்றும் சி. திலீப்குமார் என்பரே சமுர்த்தி முகாமையாளர் பதவியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார். தாபனக்கோவை விதிகளுக்கு அமைவாக இவரின் பதவி இடை நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரான இவர் மூன்று சிறுவர்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கடந்த திங்கட்கிழமை காத்தான்குடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீபாவளி தின விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

தம்பசிட்டி உதயதாரகை வி.கழகம் நடாத்தும் தீபாவளி தின விளையாட்டு விழா இன்று பி.ப 2 மணிக்கு பருத்தித்துறை சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக முன்றலில் நடைபெற வுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தி னராக மாகாணசபை உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தி னராக சனசமூக நிலையத்த லைவர் வே.நடராசா கலந்து கொள்ளவுள்ளனர். கரப்பந்தாட்டம், கயிறு இழுத் தல் உட்பட பல்வேறு போட்டிகள் நடைபெறவுள்ளன. (109)

# குமுதினி படுகொலை நினைவுத்தூபி நெடுந்தீவின் புனிதச் சின்னம்



## புனரமைப்புப் பணிகள் முழுவீச்சில் இடித்து அழிக்கும் நோக்கம் இல்லை

(நெடுந்தீவு)

குமுதினி படுகொலை நினைவுத்தூபி மண்டபத்துக்கான புனர்நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குமுதினி படுகொலை நினைவு மண்டபமானது 1985 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 36 எம் ஊர்மக்களின் நினைவாக அமைக்கப்பட்ட ஒன்றாகும்.

இது அமைக்கப்பட்டு 28 வருடங்கள் நிறைவுபெற்றுள்ள நிலையில் அம்மண்டபம் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையிலும் நெடுந்தீவு பிரதேசத்துக்கு பெருமளவில் வருகைதரும் மக்கள் அதன முக்கியத்துவம், புனிதத்தன்மை என்பவற்றை அறியாது அதனுள் இருந்து உணவு அருந்துவது போன்ற அநாகரிக செயற்பாட்டில் ஈடுபடுவதாலும் அதன் புனிதத்தன்மையானது புலப்படும் வகையிலும் புதிய வடிவில் தோற்றம் பெறும் வகையிலும் அதன் முன்பகுதி மண்டபம் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எனவே இக்கட்டடம் நெடுந்தீவு பிரதேசத்தின் வரலாற்றை பறைசாற்றுவதாகவும் அமைந்துள்ளதால் நெடுந்தீவு பிரதேச சபையின் கூட்டத் தீர்மானத்துக்கமைவாக இதை புனரமைப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டு அச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருவதோடு, எமது மக்களின் வரலாற்றுச் சின்னங்களை அழித்தொழிக்கும் செயற்பாடுகள் எதனையும் எப்போதும் எமது பிரதேச சபை மேற்கொள்ளாது என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# களை கட்டியது யாழ். நகரம்

(திருநெல்வேலி)

தீபாவளியை முன்னிட்டு யாழ். நகரம் களைகட்டியுள்ளது. தீபாவளிக்காக பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பெருந்திளரான மக்கள் நகரில் கூடியிருப்பதைப் பார்க்கமுடிகிறது.

யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் நடைபாதைக் கடைகள் பக்கம் நிறைந்தளவு கூட்டம் காணப்படுகின்றது. தந்தை செல்வா சதுக்கத்திலிருந்து தபால்கந்தோர் சந்திவரை வீதியில் இரு பக்கங்களிலும் இக்கடைகள் பரப்பப்பட்டுள்ளன.

புடைவைகள் மட்டுமல்லாது காலணிகள், அழகுசாதனப் பொருட்கள், விதவிதமான பூங்கொத்துக்கள் போன்ற நானாவித பொருட்களையும் கொள்வனவு செய்வதற்காக கூடும் மக்கள் கூட்டத்தினால் போக்குவரத்து நெரிசல் அதிகளவில் காணப்படுகின்றது.

நிரந்தரக் கடைகளாக இருக்கும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, பசார் வீதி, மின்சார நிலைய வீதி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி போன்றவற்றிலும் கூட்டத்துக்கு குறைந்தபாடில்லை.

போக்குவரத்துப் பொலிஸார் போக்குவரத்தை சீராக்குவதில் ஈடுபட்டுள்ளனர். உள்ளூர் பகுதிகளிலும் வீதிகள், சந்திகள் போன்றவற்றில் நடைபாதை வியாபாரம் அதிகளவாக உள்ளது. சீனவெடி வியாபாரமும் அமோகமாகவுள்ளது. இம்முறை தீபாவளி கொண்டாட்டம் மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதை பார்க்க முடிகிறது. (137)



ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தூதுக் குழுவினர் அதன் தலைவர் டேவிட் டலி தலைமையில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அவர்கள் கலந்துரையாடினார்கள். இதன்போது நினைவுப் பரிசில்களையும் பரிமாறிக் கொண்டார்கள்.

ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

## மற்றுமொரு சனல் - 4 காணொளி

(கொழும்பு)

பிரித்தானியாவை தளமாகக் கொண்டியங்கும் சனல் - 4 ஊடகம் வடக்கில் இடம்பெற்ற போர்க்குற்றங்களை காணொளியாக வெளிப்படுத்திவரும் தொடர்ச்சியில் நேற்றும் ஒரு சிறு காணொளியினை வெளியிட்டுள்ளது.

பொதுநலவாய மகாநாடு நெருங்கிக் கொண்டு இருக்கும் தருணத்தில் இந்த காணொளி வெளியாகியுள்ளது.

# விபத்துக்கள் பலவிதம் இந்த விபத்து தனிரகம்

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்த பஸ் வண்டியொன்று 13 வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் நேற்று கொஹுவல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகளின் பஸ் வண்டி மற்றுமொரு பஸ் வண்டியுடன் மோதியுள்ளது. இவ்விபத்து நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் பஸ்ஸில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே இந்த விபத்துக்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து, மேலும் 12 வாகனங்களுடன் இந்த பஸ் மோதியுள்ளது. விபத்துக்குள்ளான வாகனங்களில் இரு பஸ்கள் மற்றும் கார்கள் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்தில் சுற்றுலாப் பயணியொருவர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளின் சாரதி கைது செய்யப்பட்டதாகவும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கொஹுவல பொலிஸார் தெரிவித்தனர்.

# மருத்துவமனைகளுக்கு புதிய உதவித் திட்டம்

(கொழும்பு)

நாடுமுழுவதிலுடுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நிலவும் குறைபாடுகளை போக்குவதற்காக ஜனாதிபதியின் பாரியாரான முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ 'கால்டன் சுவ உதான' என்ற பெயரில் வேலைத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகின்றார். இத்திட்டத்தின் கீழ் சத்திர சிகிச்சைக்குத் தேவையான கட்டில்கள் இல்லாத ஆஸ்பத்திரிகளுக்கு அதிநவீன வசதிகள் கொண்ட 50 கட்டில் முதற்பெண்மணியினால் அன்பளிப்புச் செய்யப்பட்டன. சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முதற்பெண்மணியின் வேண்டுகோளின் பேரில் சுவிட்சர்லாந்து நிறுவனம் ஒன்றினால் சுமார் 66 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த அதி நவீன சத்திர சிகிச்சை கட்டில்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு மாநாட்டில் இந்தியா பங்குபற்ற வேண்டும்

## பா.ஜ.க. கோரிக்கை

இலங்கை தமிழர்கள் உரிமையைப்பெற, 13 ஆவது அரசியல் சட்டத்தை அமுல்படுத்த இந்தியா பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது நல்லது என பாரதிய ஜனதா மூத்த தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்பது தொடர்பாக முதலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி கட்சிகள் தங்கள் நிலைபாட்டை முதலில் தெளிவு படுத்த வேண்டும்.

தமிழக மக்களின் மன நிலையையும், வெளியுறவுக் கொள்கையை கருத்தில் கொண்டு முடிவுகள் மேற்கொள்ள வேண்டும். இது போன்ற மாநாடுகளில் பங்கேற்பதன் மூலம்தான் நமது கருத்தை வலியுறுத்த முடியும் என்றார்.

# நாணயங்கள் மீட்பு

(கொழும்பு)

கண்டி, வத்துகாமம் பாரதி தமிழ் மகா வித்தியாலய வளாகத்திலிருந்து சுமார் 250 வருடங்கள் பழமை வாய்ந்த 86 நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் ஒரு பகுதியில் ஏற்பட்டிருந்த மண்சரிவு காரணமாக அம்மண்ணை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் இந்நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பின்னர் அவை தொடர்பில் ஆராயப்பட்டதைத் தொடர்ந்து அவை 1870, 1892, 1893 ஆம் ஆண்டு காலப் பகுதிகளைச் சேர்ந்தவை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நாணயங்களை மேலதிக ஆராய்வுக்காக தொல்பொருள் திணைக்களத்திடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கச்சதீவில்...

விசாரணைக்குட்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

கச்சதீவுப் பகுதியானது இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலுள்ள ஒரு தீவாகும். இது ஏற்கனவே இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்து பின்னர் இலங்கைக்கு இந்தியாவால் வழங்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (பா)

## மன்மோகன்...

தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்கக் கூடுமென நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. விக்னேஸ்வரனின் கடிதம் கிடைக்கப்பெற்றதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் செயிட் அக்புர்டீன் தெரிவித்துள்ளார்.

இந்த அழைப்பு குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கில் தேர்தல் நடத்துவதற்கும் ஏனைய விவகாரங்களுக்கும் இந்தியா வழங்கி வரும் உதவிகளுக்கு விக்னேஸ்வரன் நன்றி பாராட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பல்வேறு காரணிகளைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாண விஜயம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கின்...

அதேவேளை மதவாச்சி - மன்னார் - தலைமன்னார் வீதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேற்படி இரு வீதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 98 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை அரசுக்கு வழங்க முன்வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள தீவகப் பகுதிகளையும் யாழ். நகரத்தையும் இணைக்கும் கேந்திர முக்கியத்துவமான யாழ்ப்பாணம்-பண்ணை - ஊர்காவற்றுறை வீதி (ஏபி - 19) பல வருடங்களாக சேதமடைந்த நிலையில் உள்ளது.

இதனைத் திருத்தி அமைக்கும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவைக் கூட்டத்தில் பிரேரணை சமர்ப்பித்திருந்தார்.

இதன் விளைவாகவே மேற்படி திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. எனவே மேற்படி வீதி அபிவிருத்தி செயற்திட்டம் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## பங்களாதேஷ்...

அவரிடம் கேட்டுக்கொண்டுள்ளதால், அவர் இந்த மாநாட்டில் ஒரு நாளாவது பங்குபற்றுவாரெனத் தெரிவிக்கப்படுகின்றது.


மேலும், பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சரும் செயலாளரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வர். பங்களாதேஷைப் பொறுத்தவரையில் காலநிலை மாற்றம், பிராந்தியப் பிரச்சினைகள், சுகாதாரம், நாடுகளிடையேயான பயணம் என்பவை முக்கிய விடயங்களாகும்.

## தேர்முட்டிச்...

தெரிவித்தார். இந்தப் பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டோ கொலைசெய்யப்பட்டோ குறித்த கிணற்றில் போடப்படவில்லை என்பது தமது விசாரணைகளின் மூலம் தெரியவந்திருப்பதாகவும், இது தற்கொலை எனவும் தெரிவித்தார்.

இருந்தும் புலன் விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் தெரிவித்தார். இந்தச் சம்பவம் குறித்து சட்டவைத்திய அதிகாரி தெரிவித்ததாக வெளியாகிய தகவல் குறித்து அவரிடம் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் கே.கே.எஸ். பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (பா)

# ஹொரனை தொழிற்பேட்டைக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்



ஹொரனை வவுலுகல பகுதியில் அமையப் பெற்றுள்ள இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் செயற்படுத்தப்பட்டு வரும் கைத்தொழிற் பேட்டைக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முற்பகல் விஜயம் செய்தார்.

இக் கைத்தொழிற்பேட்டையின் ஊடாக அமைந்துள்ள வீதி தொடர்பில் அப்பகுதி மக்களுக்கும் கைத்தொழிற் பேட்டையில் உள்ள தொழில் முயற்சியாளர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்ததை அடுத்து அப்பகுதி மக்கள் அப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க மூலமாக அமைச்சருக்கு இவ்விடயத்தை அறிவித்திருந்த நிலையில் தொழில் முயற்சியாளர்களும் தங்களது முறைப்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தெரியப்படுத்தியிருந்த நிலையில் அமைச்சர் அப்பகுதிக்கு நேரடி விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது இருதரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சர், அப்பகுதி மக்களுக்கும், கைத்தொழில் முயற்சியாளர்களுக்கும் பாதகம் ஏற்படாத வகையில் தீர்வினைப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இதன்போது களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க, அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி மங்களிக்க அதிகாரி, இலங்கை கைத்தொழிற் அபிவிருத்தி சபைத் தலைவர் நஜாப்தீன் உட்பட ஏனைய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# இரு ஊடகவியலாளர்களும் நாட்டை விட்டு வெளியேறினர்

(கொழும்பு)

சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் ஜெக்கி பார்க் பிரதி பணிப்பாளர் ஜான் வோர்த்திங்ஸ்டன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டதுடன் நேற்று அவர்கள் அவுஸ்ரேலியா நோக்கி புறப்பட்டுச் சென்றனர்.

ஊடகவியலாளர்கள்ான இந்த அவுஸ்ரேலியா பிரஜைகள் விடுதலை செய்யப்பட்டதை அவுஸ்ரேலியா வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் அவுஸ்ரேலிய ஊடகம் ஒன்றிடம் உறுதிப்படுத்தினார்.

அவர்கள் கைது செய்யப்பட்ட பிரச்சினை தொடர்பில் கொழும்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

அவர் நாடு திரும்புவர்கள் என இலங்கை வெளிவகார அமைச்சர் என்னிடம் உறுதியளித்தார் என என பிஷப் செய்தியாளர்களிடம் கூறினார். ஜெக்கி பார்க் மற்றும் வோர்த்திங்ஸ்டன் ஆகியோர் விசாரணைகளுக்காக இலங்கையில் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பில் ஊடக சுதந்திரம் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்ட போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை அவுஸ்ரேலிய பிரஜைகளான இந்த ஊடகவியலாளர்கள் சுற்றுலா விசா அனுமதியில் இலங்கை வந்து அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்று தெரிவித்தார்.

அவர்களுக்கும் எங் களுக்கும் இடையில் தனிப்பட்ட பிரச்சினைகள் எதுவுமில்லை. அவர்கள் விசா நிபந்தனைகளை மீறி செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக சட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றார்.

# வடக்கின் எழுச்சிக்கு சர்வதேச உதவி அவசியம்



(யாழ்ப்பாணம்)

வட,கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் எழுச்சிக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கும் சர்வதேச நாடுகளின் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவி அத்தியாவசியமானது என ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகியவற்றுக்கான விசேட தூதுவர் டேவிற் டெலியிடம் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரு இனங்களுக்கு இடையில் முரண்பாடுகள் மிக நீண்ட காலம் நீடித்து வருகின்றது. இந்நிலையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் முயற்சிகள் மந்த கதியிலேயே இருந்து வருகின்றது.

எனவே இந்த விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவி அத்தியாவசியமானது எனவும் ஏனைய சர்வதேச நாடுகளின் உதவிகள் மிக தேவை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் வடக்கு முதலமைச்சரை அவரது இல்லத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் மற்றும் பிரதிநிதகள் சந்தித்து பேசியிருந்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசாங்கத்திற்கு எவ்வாறான உதவிகளை வழங்கியுள்ளது என்பது குறித்து அவர் [illegible]மிடம் விளக்கமாக தெரிவித்தார். அதன் பின்னரே எத்தகைய உதவிகள் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளமை தெரிந்தது.

குறிப்பாக அவர்கள் 20ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள். அதில் 16 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டு விட்டன.

அந்தவகையில் எமது மக்களுக்காக மிக தாழ்மையுடன் அவர்கள் செய்துவரும் பணிகள் எமக்கு ஆச்சரியத்தினையும், வியப்பினையும் கொடுக்கின்றது.

எனவே அவர்களுடைய உதவிகள் தொடர்ந்தும் கிடைக்க வேண்டும் எமக்கும் அவர்களுக்குமிடையில் ஒரு ஐக்கியம் நிலவ வேண்டும் என்பதனை நாம் [illegible]டிருக்கின்றோம் என முதலமைச்சர் மேலும் கூறினார்.

# வைத்திய அதிகாரிகள் சங்கத் தெரிவு அடுத்த வாரத்திற்கு ஒத்திவைப்பு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அடுத்த வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கச் செயலாளர் டாக்டர் அஜந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லை மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கக் கூட்டம் நேற்றுப் பகல் 12.30 மணியளவில் முல்லைத்தீவு மாஞ்சோலையில் உள்ள மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்றது. தற்போது இந்தச் சங்கத்தில் 70 வரையான வைத்தியர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

புதிய நிர்வாகத் தெரிவின் போது சுமார் 10 வரையான வைத்தியர்கள் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதில் இணக்கப்பாட்டுக்கு வருவதில் இழுபறி நிலையில் இருந்ததுடன், புதிய சங்கம் ஒன்றை உருவாக்கப் போவதாகவும் தெரிவித்தனர்.

ஆயினும் ஏனைய பெரும்பான் மையான வைத்திய அதிகாரிகள் புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்து திறம்பட இயக்குவதற்கு உடன்பட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில், புதிய நிர்வாகத் தெரிவினை அடுத்த வாரம் மேற்கொள்வதென முடிவெடுக்கப்பட்டு நேற்றைய கூட்டம் முடிவுக்கு வந்தது. அடுத்த வாரம் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறும் என அவர் தெரிவித்துள்ளார். (125)

# இனங்களுக்கிடையில் நல்லிணக்கம்; பிரித்தானியா வலியுறுத்தும்

## இலங்கை குறித்து பிரித்தானிய நாடாளுமன்றில் உரை

(லண்டன்)

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் மனித உரிமைகள் பாதுகாப்பையும் கொழும்பிடம் தாம் தொடர்ச்சியாக வலியுறுத்தவிருப்பதாக பிரித்தானியாவின் விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளர் ஹியூகோ ஸ்வயர் தெரிவித்தார்.

மேலும் இலங்கை அரசாங்கமானது மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு ஆகிய விடயங்களில் திட்டவட்டமான முன்னேற்றத்தைக் காண வேண்டுமென்ற செய்தியை இலங்கை அரசாங்கத்துக்கு எடுத்துச் செல்லப்போவதாக வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளர் ஹியூகோ ஸ்வயர் நாடாளுமன்றில் கூறியுள்ளார்.

பொதுநலவாய மாநாட்டிற்கு வரும் ஊடகங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தகவல் சேகரிக்க கட்டுப்பாடுகள் இருக்கலாகாதென்பதைத் தெளிவாகக் கூறியிருக்கின்றோம் எனவும் அவர் கூறினார்.

இலங்கை அரசாங்கம், பொதுநலவாயம், ஐ.நா. மனித உரிமை பேரவை என்பவற்றினுடனான எமது தொடர்புகள் மூலம் இந்த விடயங்களை நாம் ஏற்கெனவே வலியுறுத்தி வந்துள்ளோமெனவும் அவர் கூறினார்.

வேறு நாடுகளுடனும் நாம் தொடர்புகளை வைத்திருக்கின்றோம் எனவும் அவர் கூறினார்

இதற்கு மேலாக வடமாகாணத்திலுள்ள சிவில் சமூக நிறுவனங்களுடன், அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் பேசிவருவதாகவும் அவர் கூறினார்.

மாநாட்டின்போது பிரதமரும் தானும் இலங்கையின் களநிலைவரத்தை நேரடியாகச் சென்று பார்க்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பொதுநலவாய மாநாட்டை நடத்துபவர் என்ற வகையிலும் இனிவரும் காலத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளதாலும் பொதுநலவாயத்தின் விழுமியங்களின் தராதரத்துக்கு அமைந்து செயற்பட வேண்டுமென்பதை இலங்கைக்கு தெளிவாக்கியுள்ளோம் எனவும் அவர் கூறினார்.

# இரு முன்னாள் புலிகள் விளக்கமறியலில்

வில்பத்து சரணாலயத்திற்குள் இராணுவ சிப்பாய்கள் சிலரை கொலை செய்த குற்றச்சாட்டில் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் இருவர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு உள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி ஹேமா சுவர்ணாதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

2007 மார்ச் மாதம் 9 ஆம் திகதி வில்பத்து சரணாலயத்திற்குள் ஜீப் ஒன்றில் பயணித்த இராணுவ சிப்பாய்கள் நால்வர் கொலை செய்யப்பட்டனர்.

இக்கொலை தொடர்பில் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் இருவர் மீது பயங்கரவாத தடுப்புப் பிரிவு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# பாடகி மீது தண்டம்

தனது வளவில் நுளம்பு பெருகுவதற்கான சூழலை வைத்திருந்தாரெனும் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட பிரபல பாடகிக்கு அரசாங்க செலவாக ஆயிரத்து 500 ரூபா செலுத்தும்படி நுகேகொடை நீதவான் அஜித் பி. மாப்பா நேற்று பணித்தார். நீதிமன்றுக்கு வராத காரணத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் சரணடைந்த பாடகி விஷாதரா தீபிகா என்பவருக்கு அரச செலவை செலுத்தும்படி கட்டளையிடப்பட்டது.

வழக்கறிஞர் விதுர பி. மஞ்சநாயக்கா தனது கட்சிக்காரர் சிறுவர் இல்லமொன்றின் தொண்டராக இருப்பதை சுட்டிக்காட்டி அவருக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கேட்டதை தொடர்ந்து நீதவான் இத்தீர்ப்பை வழங்கினார்.

## கொரியமொழிப் பரீட்சையில் 2, 466 பேர் சித்தி

(கொழும்பு)

கொரியமொழித் தேர்ச்சிப் பரீட்சைக்கு தோற்றிய 18 ஆயிரத்து 466 பேரில் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 466 பேர் சித்தியடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

உற்பத்தித் துறையில் 538 பேரும், நிர்மாணத் துறையில் ஆயிரத்து 28 பேரும், மீன்பிடித் துறையில் 960 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.